விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாதி 16 முறை 16 இதழ் 234
யாழ்ப்பாணம் புதன்கிழமை 2-10-1985

## தமிழ்க்குழு — மத்தாயி இன்று ஆலோசனை

(சென்னை)
தமிழ்க் குழுக்களுடன் ஆலோசனை நடத்தும் பொருட்டு நேற்று முன்தினமிரவு சென்னைக்கு வந்திருக்கும் மத்திய வெளியுறவுத் துறை அதிகாரி திரு ரஞ்சன் மத்தாயி தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் திரு எஸ்.

(5-ம் பக்கம் பார்க்க)

## கிராமங்களைத் தழுவிய பாதயாத்திரை!
### வீதிதோறும் உற்சாக வரவேற்பு

(அலுவலக நிருபர்)
யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் யாழ் குடாநாட்டில் உள்ள கிராமங்கள் தோறும் மேற்கொண்டுவரும் பாதயாத்திரை இன்று ஏழாவது நாளாகத் தொடருகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு 19 மாதங்களுக்கு மேலாக சிறைக்கூடங்களிலும், வதை முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டு பலவித இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலைசெய் அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்து என்பதே யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கையாகும்.

இக்கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்துவந்த மாணவர்கள், உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டு கடந்தமாதம் 26ம் திகதி காலை பாதயாத்திரையை ஆரம்பித்தது தெரிந்ததே.

(5ம் பக்கம் பார்க்க)

# இனப் பிரச்னை: சுமுகமான தீர்வு விரைவில் வேண்டும்!

## முன்னாள் பிரெஞ்சு பிரதமர் கருத்து

(பாரிஸ்)
"இலங்கை இனப் பிரச்னை கூடிய விரைவில் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்படவேண்டும். பிரச்னையை மேலும் வளர்ப்பது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாதகமாகவே முடியும்" என்று முன்னாள் பிரெஞ்சுப் பிரதமர் திரு. பியறி மயூரி கருத்து வெளியிட்டுள்ளார்.

பிரான்ஸில் இலங்கையின் புதிய தூதராகப் பதவியேற்ற திரு. ஜி. பி டி. சில்வாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவமொன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

முன்னாள் பிரெஞ்சுப் பிரதமரும், தற்போதைய லில்லி நகர மேயருமான திரு பியறி மயூரி தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்; "இலங்கை இனப் பிரச்னை அந்த நாட்டின் தேசிய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் ஒரு சவாலாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றி, கூடிய விரைவில் இனப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வொன்றைக் காண்பதில் இலங்கை அரசு அக்கறை செலுத்தவேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

## வீடுகளைப் பார்க்கச் செல்லும் பெண்கள் விரட்டியடிக்கப்படுகிறார்கள்!

(திருகோணமலை)
திருகோணமலைப் பகுதியில் பாதிக்கப்பட்ட தங்கள் வீடுகளைப் பார்வையிடச் சென்ற பெண்கள், ஊர்காவல்படையினரால் விரட்டியடிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சுக்கு மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

திருமலையில் வீடுகளைவிட்டு வெளியேறியவர்கள் அகதிகள் முகாம்களிலும், வெளிமாவட்டங்களிலும்

(5-ம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரம் நோக்கி மீண்டும் தமிழ் அகதிகள்!

(சென்னை)
கடந்த ஞாயிற்றுக்கிழமை 208 தமிழ் அகதிகள் நான்கு படகுகளில் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர். இவர்களில் 75 ஆண்களும் 50 பெண்களும் 83 குழந்தைகளும் அடங்குவர்.

## 12 வயதுச் சிறுமியின் கண்ணீர்க் கதை!

(வவுனியா)
புளியங்குளம் அகதிமுகாமில் 12 வயதான நேசமலர் என்னும் சிறுமி பெற்றோரை இழந்த நிலையில் இருக்கிறார். "மரணம் அப்பத்திரிக்கு போன அம்மா இன்னமும்

(8 ம் பக்கம் பார்க்க)

## சந்திரகாசனின் அமெ. விசா ரத்து

(சென்னை)
சென்னையில் தற்போது தங்கியிருக்கும் திரு. எஸ் சி சந்திரகாசனுக்கு அமெரிக்கா முன்னர் வழங்கியிருந்த விசா அனுமதியை ரத்துச் செய்துள்ளது!

இந்த ரத்து பற்றிய அறிவித்தலை வாஷிங்டன், சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மூலம் அறிவித்துள்ளது.

இந்த விசா அனுமதி திரு. சந்திரகாசனுக்கு 1982-ம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டது. ஆயினும் அவர் அதனை இதுவரை ஒருமுறையும் பயன்படுத்தாத காரணத்தினாலேயே விசா இப்போது ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

## 59 தீவிரவாதிகள் கைது: பாதுகாப்பு அமைச்சு தகவல்

(கொழும்பு)
திருகோணமலைப் பகுதியில் திடீர் சோதனை நடத்திய ஆயுதப்படையினர் 59 தீவிரவாதிகளைக் கைது செய்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

அதேசமயம் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து இரு ட்ராக்டர்கள், 9 பரல் டீசல்,

(5ம் பக்கம் பார்க்க)

சாம்பல்தீவு, சல்லி பகுதிகளில்

## வயோதிபர் உட்பட 65 பேர் கைது

(திருகோணமலை)
திருகோணமலையிலுள்ள சாம்பல்தீவு, சல்லி ஆகிய பகுதிகளை நேற்று முன்தினம் சுற்றிவளைத்த இராணுவத்தினர் குடும்பஸ்தர்கள், வயோதிபர் உட்பட 65 பேரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் கோவில்களில் பூசை நடத்தும் பிராமணர், குருக்கள் ஆகியோரும் அடங்குவர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## ரூ $1\frac{1}{2}$ லட்சம் கொள்ளை
### நாரந்தனையில் சம்பவம்

(வேலணை)
வீட்டில் தனிமையாக இருந்த பெண்களைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்திய இனந்தெரியாத கோஷ்டியினர் சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும்,

(5-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா ஸ்தம்பிதம்!

(வவுனியா)
வவுனியா பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து மயான அமைதி இங்கு நிலவுகிறது.

நேற்றும் வவுனியா இயங்கவில்லை.

அரச அலுவலகங்கள் மட்டுமின்றிப் பாடசாலைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. போக்குவரத்துச் சேவையும் சீர்குலைந்திருந்தது.

## பொத்துவில் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது!

(கொழும்பு)
பொத்துவில் பொலிஸ் நிலையத்தை நேற்று அதிகாலை தீவிரவாதிகள் தாக்கியதாகவும் பொலிசார் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலை அடுத்து தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டதாகவும் அரசாங்கச் செய்தி அறிக்கை தெரிவித்துள்ளது.

"பொலிஸ் நிலையத்திலிருந்து 40 யார் தூரத்தில் தீவிரவாதி ஒருவரின் சடலத்தை

(5-ம் பக்கம் பார்க்க)

அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

A/L 86
(Science)
DAY
CLASSES

யூனிவேர்சல்

கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

உயர்தர வகுப்புகளுக்கு தகுதியும், திறமையும் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஒரே நிறுவனம்
1020

# விளம்பரம்

## வாடகைக்கு

அரியாலை நாம்பழச்சந்திக்கு அருகாமையில் (கண்டி வீதியில், சகலவசதிகளுடன் கூடிய 6 அறை வீடு உடன் வாடகைக்கு உண்டு. நல்ல குடிநீர் வசதியுண்டு. விபரங்கட்கு: நாவற்குழி மெடிக்கல் சென்ரர், கண்டி வீதி, நாவற்குழி. 1015

## விற்பனைக்கு

சுத்தமான பசுப்பால் விற்பனைக்குண்டு: 102, அம்பலவாணர் றோட், அத்தியடி, யாழ்ப்பாணம். 995

புத்தம் புதிய National NV 670 EN டெக் ஒன்று விற்பனைக்குள்ளது; தொடர்பு கொள்க: குணம் வீடியோ சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 23665 (1003)

## வகுப்புகள்

பிற்மன் தமிழ், ஆங்கிலதட்டச்சு, சுருக்கெழுத்து, Spoken English, Book-Keeping, A/L 86/87: நடைபெறும் இடங்கள், ஆரம்பம்: 10-10 85 J E C. (மேல்மாடி), சாந்தி சினிமா முன்பாக, யாழ்ப்பாணம். பிறிலியன் அக்கடமி, (1) பிரதான வீதி, பருத்தித்துறை. (2) மஹாத்மா வீதி, நெல்லியடி. (3 வதிரிச்சந்திக்கருகில், வதிரி. 1005

## விற்பனைக்கு

இரண்டு கடைகள், கடைக்குரிய தளபாடங்கள்: அலுமாரி, ரூக்கைகள், ஷோகேஸ்கள் விற்பனைக்குண்டு; 379, மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். 1001

ஏராளமான ஆங்கில, தமிழ் நாவல்கள், புத்தகங்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு; R. பாலசுப்பிரமணியம், 125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 978

வீட்டிலிருந்து உடைத்து எடுக்கப்பட்ட கல், மண், மக்கி சுமார் 100 ட்ராக்டர் லோட் கொண்டது விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். விபரங்களுக்கு: பொ. தணகரத்தினம், 605/1 (365), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1023

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

### நூல் வெளியீடு

(கரவெட்டி)

'குடும்ப முதலுதவி' எனப்படும் நூல் ஒன்றை கட்டைவேலி- நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் வெளியிடவுள்ளது; பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி க. சுகுமார் இதனை எழுதியுள்ளார்.

## தேவை

ஒரு வீட்டில் உள்ள தனிமையான பெண் ஒருவருக்கு சமையல் வேலையும் வீட்டு வேலையிலும் உதவியாய் இருப்பதற்கு ஒரு நடுத்தர வயதுப் பெண் தேவை. உணவுடன் தகுந்த சம்பளமும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 980, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 980

## தவறிவிட்டது

29-9-85 மாலை வைத்தியர் இராமசுவாமி வீட்டிலிருந்து ஆடியபாதம்வீதி சந்தைப்பக்க வழியாக அரியாலைக்குப் போகும்போது இரு நகைகள் தங்கலெட்சுமி என்ற பெயருள்ள லோக்கெற் ரசீதுடன் மணிபர்ஸ் தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்த நன்மக்கள் தயவுசெய்து கலங்கிக் கொண்டிருக்கும் அனாதையாகிய என்னிடம் திருப்பித் தரும்படி மன்றாட்டத்துடன் வேண்டிக் கொள்கின்றேன். தங்கலட்சுமி, C/o வைத்திய கலாநிதி. க. இராமசுவாமி. 'துவாரகை', திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 1018

### WANTED

Qualified Chartered Accountant willing to offer his service either in the Audit firm or Mercantile sector. Capable of Lecturing also. K. Thayalakrishnan, Hospital Lane, Manipay. 1014

### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீராவியடி கல்லூரி லேன் 44/4ம் இலக்கத்தில் வசிக்கும் காலஞ்சென்ற மருதப்பு கண்ணையாவின் மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிர்வாகப்பத்திரம் விடயத்தில்.

காலஞ்சென்றவர்

மருதப்பு கண்ணையா மகன் ஜெகதீஸ்வரன், 44/4, கல்லூரி லேன், நீராவியடி, யாழ்ப்பாணம்;

மனுதாரர்;

வழ: இல: தத்துவம்/3909

எதிராக

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுளகட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1985ம் ஆண்டு ஆவணி மாதம் 9ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைந்தது:
ச. மகேசன்,
மனுதாரரின்
சட்டத்தரணி. 953

### இந்துமத கோயில்களுக்கு உதவி!

டாக்கா, அக் 1

பங்களாதேஷில் இந்து சமய ஆலயங்களைப் பேணுவதற்கு அரசாங்கம் நிதியுதவி அளித்துள்ளது.

இதற்கென 6 லட்சம் ரூபாவை பங்களாதேஷ் அரசு ஒதுக்கியுள்ளது நேற்று நிகழ்ந்த கூட்டமொன்றில் பங்களாதேஷ் சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் நூருல் இஸ்லாம் இந்த உதவித் தொகையை அறிவித்தார்.

பங்களாதேஷ் ஒரு இஸ்லாமிய நாடான போதிலும் அங்குள்ள இந்து மத விடயங்களுக்கு அந்நாட்டு அரசு முக்கியமளித்துள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். (இ)

### முதலுதவிப் போட்டி

(கரவெட்டி)

பருத்தித்துறை, உடுப்பிட்டித் தொகுதிகளின் செயின் ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவுகளுக்கிடையிலான முதலுதவிப் போட்டி இம்மாதம் 5-ம் திகதி புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது- இப்பிரிவுகளின் வருடாந்த அணிவகுப்பு எதிர்வரும் 9ம் திகதி காலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

உ
சிவமயம்

## 2-வது ஆண்டுச் சிராத்த திதி

2-10-1985

### திரு. சு. மகேசன்

(கொ/விவேகானந்த மகாவித்தியாலய முன்னாள் அதிபர்)



மலர்வு:
06-04-1925

திருவடி:
26-09-1983

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

என்ற வள்ளுவத்திற்குத் தக்க எடுத்துக்காட்டாக நிறை மனிதனாக, நல்லாசிரியராக, நல்லதிபராக, உத்தம குணவராக, உயர் நோக்கராக, ஏழைகள் பங்காளராக, ஈகைஇரக்கமுடையவராக, சமூகநலத் தொண்டராக, அன்பின் ஊற்றாக, அறிவின் ஒளியாக விளங்கி நாட்டிற்கும், நமக்கும் நலம் பல செய்த தியாகச்சுடராகிய தாங்கள் வானுலகை எய்திய நாள் தொட்டு தங்களை நினைத்துருகும் யாம், தங்களது இரண்டாவது சிராத்தத் தேய்பிறைச் சதுர்த்தித் திதி நாளாகிய இன்று (புதன்) தங்களதும், தங்கள் குலமுன்னோரதும் ஆன்மாக்கள் அமைதி பெறப் பெருமான் திருவடிகளை வழுத்தி வணங்குகின்றோம்.

அன்பு நீங்கா மனைவி காந்திமதி, சகோதரிகள், மைத்துனர், மருமக்கள். மற்றும் உறவினர் அன்பினர்;

வட்டு.கிழக்கு: சித்தன்கேணி; (1019)

## மரண அறிவித்தல்

### T. E. தம்பிஐயா

மயிலங்கூடலைச் சேர்ந்த சமாதான நீதவானும், பிரபல வைத்தியரும், ஓய்வுபெற்ற P. W D ஓவசியருமான திரு திருச்செல்வராசா இம்மானுவேல் தம்பிஐயா 1-10 85ல் காலமானார். இவர் விளுசி முத்து திருச்செல்வராசா (வைத்தியர் செல்லர்) தம்பதிகளின் மகனும், திரேசம்மாவின் அன்புக்கணவரும், செல்வி ஞானரத்தினம் ஆசிரியை கனகசபை வித்தியாலயம் முள்ளானை) துரைசிங்கம் (T O கட்டிடங்கள் திணைக்களம், கொழும்பு), அன்ரன் பாலசிங்கம் (ஆரம்ப நீதிமன்ற நீதிபதி. முல்லைத்தீவு), திருமதி பத்திமா இரட்டினராசா, இராஜகுலசிங்கம், றீற்று, மரியரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையும்: புஸ்பவதி துரைசிங்கம் (மக்கள் வங்கி சுன்னாகம்), P. R. இரட்டினராசா (கடதாசிக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை), ராஜபதி சவுந்தரராணி ஆகியோரின் மாமனாரும், இராசையா இளைப்பாறிய (Retd P W D), இன்ஞாசிமுத்து [Retd Bank of Ceylon], பொன்னையா, திருமதி செபரத்தினம் வேதநாயகம், இன்னையா (Retd கூட்டுறவு பரிசோதகர், ஆகியோரின் சகோதரருமாவார். நல்லடக்கம் 2-10-85 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சேந்தான்குளம் ஆரோக்கியநாதர் குடும்ப சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். 1021

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அழைப்பு

### சேதுபதி தாமோதரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற யாழ். உணவுக் கட்டுப்பாட்டுக் களஞ்சியப் பொறுப்பாளர்)

தோற்றம்:
04-05-1915

மறைவு:
03-09-1985

திதி:
03-10-1985



எங்கள் நெஞ்சமெல்லாம், அணையாச் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் சிகரமாய், எல்லோர் நன்மதிப்பையும் பெற்று, மின்னலென மறைந்து, எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

3-10-1985 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31-ம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு உறவினர். நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்!
குடும்பத்தினர்.

"தாமோதர இல்லம்",
காங்கேசன்துறை வீதி, மல்லாகம். 1002)

# கோபச்சேவுடனான சந்திப்பு பற்றி ஆராய
# சகாக்களை வாஷிங்டன்
# அழைக்கிறார் றீகன்!

வாஷிங்டன், அக். 1

சோவியத் தலைவர் திரு. மிக்கேல் கோபச்சோவுடனான சந்திப்புக் குறித்து ஆராய அமெரிக்க அதிபர் திரு. றொனால்ட் றீகன் தமது மேற்கத்தைய சகாக்களை வாஷிங்டனுக்கு அழைத்துள்ளார். மேற்கு ஜெர்மன், கனடா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி ஆகிய இந்த மேற்கு நாடுகளுடன் ஜப்பானுக்கும் திரு. றீகனால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



நவம்பர் மாத இறுதிப்பகுதியில் திரு றீகன்-கோபச்சோவ் சந்திப்பு ஜெனீவாவில் இடம்பெறவுள்ளது. அரசியல், பாதுகாப்பு, பொருளாதார விடயங்களில் அமெரிக்கா-ரஷ்யா ஆகியவற்றின் பிரதிநிதிகள் சிக்கலான கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில் இச்சந்திப்பு மிகமுக்கியத்துவம்வாய்ந்ததாக இருக்குமெனக் கொள்ளப்படுகின்றது.

அமெரிக்காவினுடைய அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைத் தழுவியதாகவே மேற்குறிப்பிட்ட ஆறு கைத்தொழில் நாடுகளினதும் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. அத்துடன், அரசியல்-இராணுவ விடயங்களில் இவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளன. ஆகையினாலேயே திரு. றீகன், கோபச்சோவுடனான தமது சந்திப்பில் இந்நாடுகளின் கருத்தையும் அறிவதில் பெரும் ஆர்வம் கொண்டுள்ளார்.

இம்மாத இறுதிப்பகுதியிலேயே வாஷிங்டன் வருமாறு திரு. றீகன் இந்நாடுகளை அழைத்துள்ளார். திரு. கோபச்சோவுடன் சச்சிதமாகவும், திட்டவட்டமாகவும், அணித்தரமாகவும் மேற்கு நாடுகள் பரிமாறிக்கொள்ள வேண்டிய விடயம் குறித்து அமெரிக்க அதிபருடன் இந்த கைத்தொழில் நாடுகளின் அதிபர்கள் விரிவாக ஆராய்வார்கள் என்று கூறப்பட்டது.

உலகச் செய்திகள்

ஆயினும் திரு. றீகனின் இந்த அழைப்பை இந்நாடுகளில் எவை ஏற்றுள்ளன என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. (ஸ)

# சோவியத் ராஜதந்திரிகள் பெய்ரூட்டில் கடத்தல்!

பெய்ரூட், அக். 1

பெய்ரூட்டில் சோவியத் தூதரகத்தைச் சேர்ந்த மூன்று ராஜதந்திரிகளும், ஒரு டாக்டரும் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர்.

இந்த ஆட்கடத்தலுக்கு லெபனானின் இஸ்லாமிய ஜெஹாட் பிரிவே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இயக்கம் தொலைபேசிவாயிலாக இக்கடத்தலுக்கு உரிமைகோரியதுடன் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாதவிடத்து இந்த சோவியத் நாட்டவரைக் கொலை செய்யப் போவதாகவும் அறிவித்துள்ளது.

வடலெபனானில் இடம்பெற்றுவரும் தீவிரவாத லெபனான் முஸ்லிம் பிரிவுகளுக்கிடையிலான மோதலை நிறுத்தும்படி இந்த இயக்கம் சோவியத் யூனியனுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

தனது நேசநாடான சிரியாவின் பின்னணியுடன் வடலெபனானில் சோவியத் யூனியன் மோதலைத் தூண்டியுள்ளதாக ஜெஹாட் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இப்பிரிவினர் ஒரு தற்கொலைப்படையினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. தமது நோக்கங்களை நிறைவேற்ற மோசமான முடிவுகளை எடுக்கவும் தயங்காதவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் ஏற்கெனவே பிரான்ஸ், அமெரிக்கா உட்பட சில மேற்கு நாட்டுத் தலைவர்களைக் கடத்தியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்பிரிவினர் சோவியத் நாட்டவரைக் கடத்தியிருப்பது மேற்காசிய அரசியலில் பலமான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கடத்தல் குறித்து சோவியத் யூனியன் இதுவரை எதுவித கருத்தையும் வெளியிடவில்லை. (ஸ)

மெய்வல்லுநர் உலகக்கிண்ணம்:

# ஆசிய அணிக்கு பி. டி. உஷா தலைவி!

புதுடில்லி, அக் 1

அவுஸ்திரேலியாவின் கன்பரா நகரில் இடம்பெறவிருக்கும் உலகக் கிண்ணத்துக்கான மெய்வல்லுநர் போட்டிகளில் ஆசிய அணிக்கு இந்திய வீராங்கனையான செல்வி பி. டி. உஷா தலைமை தாங்குகிறார்.

ஆசிய பிராந்தியத்தில் மிக முன்னணி நாடுகளைச் சேர்ந்த 42 போட்டியாளர்களை பி. டி. உஷாவின் ஆசிய அணி கொண்டிருக்கும்.

21 வயதான கேரளத்தைச் சேர்ந்த வீராங்கனை 'ஆசியாட்'டில் சாதனைகளை நிலைநாட்டியதுடன், அண்மையில் ஜகார்த்தாவில் நடந்து முடிந்த ஆசிய போட்டிகளிலும் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றார்.

உலகக் கிண்ண மெய்வல்லுநர் போட்டிகளில் 1000மீட்டர்கள் அஞ்சல் ஓட்டம், 400 மீட்டர்கள் தடைதாண்டி ஓட்டம், 400 மீட்டர்கள் ஓட்டம் ஆகியவற்றில் பி. டி. உஷா பங்குபற்றுகிறார்.

இவர் இந்திய ரயில்வேயில் ஒரு உயர் பதவியில் பணியாற்றுகிறார். இவரின் ஆசிய அணித் தலைமையை இந்திய ரயில்வே இணை அமைச்சர் திரு மாதவராவ் சிந்தியா பாராட்டியுள்ளார். (ஸ)

பஞ்சாப் மாநிலத்தில்—————

# 224 தடுப்புக்காவல் கைதிகள் விடுதலை!

சண்டிகார் அக். 1

பஞ்சாப் மாநிலத்தில் அவசரகாலச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த 224 பேரை உடனடியாக விடுதலை செய்யும்படி முதலமைச்சர் திரு சுர்ஜித்சிங் பர்னாலா பணித்துள்ளார். இக்கைதிகள் அனைவரும் சீக்கியர்களாவர். கடந்த ஆண்டுமுதல் இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் விடுதலை செய்யப்படுவதையடுத்து 9 பேர் மட்டுமே தொடர்ந்து காவலில் இருப்பர் என்று கூறப்பட்டது. சீக்கிய தீவிரவாத இளைஞர்களின் கவனத்தைத் திசை திருப்பும் முதல் நடவடிக்கையாக இது அமைந்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

திரு பர்னாலா நேற்று சண்டிகாரில் பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது;- "தவறான பாதையில் சென்றுள்ள சீக்கிய இளைஞர்களை நல்வழிப்படுத்துவது மாநில அரசின் முக்கிய பணியாகும்.

தேசிய உயிரோட்டத்தில் இந்த இளைஞர்களைத் தீவிரமாகப் பங்குபடுத்தவேண்டிய நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.

புதிய சுபீட்சமான பஞ்சாப் மாநிலத்தை உருவாக்கவேண்டிய பொறுப்பு அகாலிதள அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. சீக்கிய இனத்தவர், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ இனங்களுடன் ஒன்று சேர்ந்து தேசிய ரீதியில் மாநில வளர்ச்சிக்காகவும், நாட்டு நலனுக்காகவும் தொடர்ந்து உழைக்க வேண்டும்" என்றார். (ஸ)

# ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசெல்வச் சந்நிதி தொண்டர் திருப்பணிச்சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 24-11-85 ஞாயிறு காலை 9 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேற்படி சபையின் செயலாளர் க. அருணாசலம் அறிவித்துள்ளார். சபையின் பொதுக்கூட்டம் கடந்த 29 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற விருந்தது தெரிந்ததே.

மேலும் சபையின் யாப்பு உபவிதிகளை ஆராய்ந்து சமர்ப்பிக்க ஐவர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

போர் நிறுத்த மீறல்:

# பின்விளைவுகளுக்கு இலங்கை அரசே பொறுப்பாகும்!

## ஈ. தே. வி. — த. வி. கூ.

(சென்னை)

இலங்கையில் வடக்கில் உள்ள போர்நிறுத்த மீறல்களின்பின் விளைவுகளுக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்பு என்று த. வி. கூ., ஈ. தே. வி. மு. ஆகியன தெரிவித்துள்ளன.

சென்னையில் நேற்று கூடி வெளியிட்டபோதே இவை இதனைத் தெரிவித்தன. இலங்கை அரசு யுத்தநிறுத்த நடைமுறையை மீறுவதைவிட அவதானமாக நடந்துகொள்ள வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்திய வெளியுறவுத்துறையைச் சேர்ந்த திரு ரஞ்சன்மத்தாயி நேற்று சென்னை வந்தசேர்ந்தார். இலங்கைப் பிரச்னை தொடர்பாக ஆராய்வதே இவரின் முக்கிய நோக்கமாகும்.

ஆயினும் எத்தகைய திட்டங்களுடன் அவர் வந்துள்ளார் என்பதும், எவ்வளவு நாட்கள் அவர் சென்னையில் தங்கியிருந்து பேச்சுக்கள் நடத்துவார் என்பதும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை அமெரிக்காவில் உள்ள ஈழத் தமிழர்களின் ஆதரவாளரான டாக்டர் ஸ்டீவ் திருச்சிற்றம்பலம் நேற்று ஈ. தே. வி. மு. பிரதிநிதிகளையும் ஏனைய இலங்கைத் தமிழ்ப் பிரமுகர்களையும் சந்தித்து உரையாடினார். (ஸ)

# "யாழ்வரலாறும், இந்துக்கல்லூரிகள் வரலாறும் பின்னிப் பிணைந்தவை!"

## முன்னாள் அதிபர் சி. கே. கே.

(ஐ. சண்முகலிங்கம்)

"யாழ்ப்பாணத்தின் வரலாறும் இந்துக் கல்லூரிகளினது வரலாறும் ஒன்றுபட்டு பின்னிப் பிணைந்தவையாகும் 19ம் நூற்றாண்டில் சைவ பரிபாலன சபை நிறுவப்பட்டது 1890ம் ஆண்டு முதலாவது இந்துக் கல்லூரி யாழ். சிவன்கோவிலடியில் ஆரம்பிக்கப்பட்டது இதிலிருந்து யாழ்ப்பாணத்தின் பல பாகங்களுக்கு இந்துக் கல்லூரிகள் விருத்தி விஸ்தரிக்கப்பட்டது. இவ்வாறு நிறுவப்பட்ட கல்லூரிகளில் யாழ்-கொக்குவில் இந்துக்கல்லூரியும் ஒன்றாகும், இது 1910ம் ஆண்டு நிறுவப்பட்டதாகும்".

இவ்வாறு கொக்குவில் இந்துக் கல்லூரி பிரதமவிருந்தினராக பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பரிசளிப்பு உரை நிகழ்த்திய இக்கல்லூரியின் முன்னாள் அதிபரான திரு. சி. க. கந்தசுவாமி குறிப்பிட்டார்கள்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் கடந்தவாரம் நடைபெற்ற இப் பரிசளிப்பு விழாவில் திரு சி. க. கந்தசுவாமி தொடர்ந்து தமது உரையில் குறிப்பிட்டதாவது;

"ஆறுமுக நாவலர் அவர்கள் தமிழ் வளரவும், சைவ சமய மக்கள் முன்னேறவும், தமிழர் கலாசாரம் பாதுகாக்கப்படவேண்டியும் சைவசமய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார் அதனால் யாழ் இந்துக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதும் தொடர்ந்து இந்துப்பாடசாலைகள் ஸ்தாபித்து வைக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் இன்று காணப்படும் இந்துப் பாடசாலைகள் இந்த சைவ முயற்சியின் பலனாகவே ஒவ்வொரு சைவப் பிரமுகர்களின் உதவிகளினால் ஸ்தாபிக்கப்பட்டன

1910 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கொக்குவில் இந்துக் கல்லூரி 40 ஆண்டு காலமாக சிறிய பாடசாலையாகவே இயங்கி வந்தது 5ம் வகுப்பில் இருந்து 8ம்வகுப்பு வரை படிப்படியாக உயர்ந்து இன்று நமது நாட்டில் உள்ள பெரிய பாடசாலைகளில் ஒன்றாக உயர்ந்து நிற்கின்றது ஐந்து முறை தீய சக்திகளின் தீ மூலமாக இக்கல்லூரியை அழிக்க எடுத்த முயற்சிகள் பயன் அற்றவையாகவே முடிந்தன இன்று இக்கல்லூரி படிப்படியாக உயர்வடைந்து 70 - வது ஆண்டினைப்பூர்த்தி செய்யும் கட்டத்தில் விளங்குகின்றது

திரு கந்தசுவாமி மேலும் "தமிழ்மொழி மூலம் கல்வைக்

(5ம் பக்கம் பார்க்க)

### மணி வாக்கு

ஆத்ம சக்திக்கு பலாத்காரம் முற்றிலும் விரோத மானது. தனிப்பட்டவர்கள் மட்டுமன்றி சமூகங்களும் மேற்கொள்ளக்கூடிய சக்தி இது.

—மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## மகாத்மாவின் தலைமைத்துவம் எவ்வகையில் தனித்துவமானது?

சீனத்தலைவர் கன்பாற்செல் ஒருசிறந்த ஆன்மீகப் பலம்பெற்ற தலைவர். சீனாவைக் கட்டிஎழுப்பும் பணியில் அவருக்கிருந்த அளவு கடந்த இலட்சியப் பிடிப்பு, மகாத்மாவின் செயலாற்றும் திறனுடன் சேர்ந்திருந்தால் சீன வரலாறு முற்றும் மாறுபட்டிருக்கும்.

இக்கருத்தை வெளியிட்டவர் சீனாவில் வாழும் அமெரிக்க பெண்மணி உலகப் புகழ்பெற்ற பேர்ள்பக்.

காந்தியின் தலைமைத்துவம் பற்றி விளக்கும்போது இந்தவேற்றுமையை அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அது சர்ச்சைக்குரிய கருத்தானாலும் மகாத்மாபிறந்த இத்தினத்தில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

மக்களுக்கு காலத்தின் பின்னணியில் வேண்டிய தலைவர் தென்படுகிறார். அத்தலைவர் மக்களின் அபிலாஷகளை உருவாக்குகின்றார். மக்களுக்கு அவரில் நம்பிக்கை வளர்கின்றது. தலைவர் மக்கள் சக்தியை எடைபோடுகின்றார். இந்த வசீகரமான தொடர்பே நாட்டை முன்னேற்றுகிறது.

சொல்வது யார்க்கும் எளிது; அரியவாம் சொல்லியவண்ணம் செயல் என்ற பொய்யா மொழிக்கு நாம் நேரில் கண்ட மனிதரில் இன்று காந்தியைவிட வேறு யாரையும் நினைக்கலாமா?

சத்தியசோதனையில் ஈடுபட்ட காந்தி எதனையும் முடிந்த முடிபாகக்கொள்ளவில்லை. தீண்டாமை என்னும் பிசாசு இந்தியாவின் கேடுகளின் முதல் நம்பர் என்று கண்டார்; தமது மனைவியின் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டிய போதும், ஒரு ஹரிஜனப் பெண்ணை தன் மகளாக வளர்த்து வந்தார். தான் செய்ய முடிந்ததையே மக்களுக்கும் போதித்தார்.

உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தபோது இந்திய அரசும் (பிரிட்டிஷ்) அதன் பக்கவாத்தியங்களும் நகைத்தன. தண்டிக் கடற்கரை இன்று இந்திய சுதந்திர வரலாற்றில் ஒரு பிரதானமான அத்தியாயம்.

வட்டமேசை மாநாட்டுக்கு லண்டன் சென்றபோதும் அவருடன் ஆடும்சென்றது "அரை நிர்வாணியாக"ப் போனதும், ஆங்கிலக் குளிருக்கு தமது கையால் நெசவுசெய்த கம்பளிச்சால்வையே பாதுகாப்பு என்றதும் பொதுமக்களுக்குப் புரியமுடியாதவிடயம். எழுபதுகோடிமக்களின் வறுமை வாழ்வுக்கு காந்தியே இன்னம் என்று நடித்த நாடகம், சுதந்திரத்துக்கு பலத்த அத்திவாரம் அளித்தது.

பொதுமக்களின் பூரண நம்பிக்கை பெறமுடியாத அல்லது பெற்றும் அதனைத் துர்ப்பிரயோகம் செய்யும் தலைவர்கள் ஒருபோதும் வெற்றிகாண மாட்டார்கள். ஒரு குறிப்பிட்ட காலஎல்லைக்குள் அவர்களின் செல்வாக்கைப் பத்திரிகைகள் பறைசாற்றும். மாரிகாலன் கோடைபிறக்க மறைவதுபோல, போலித் தலைவர்கள் புரட்சி செய்வதில் தோல்வியையே காண்பார்கள். ஹிட்லரின் ஜெர்மனி கற்பிக்கும் பாடம் இது.

லண்டனிலிருந்து திரும்பும்போது வெறுங்கையை விரித்துகாட்டி அவருடைய பொய்யா உள்ளத்தையும் அஞ்சாமையையும் குறிக்கின்றது. அன்று தொடக்கம் 'வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷத்தை பகிரங்கமாக எழுப்பும் வரைக்கும் நடந்த போராட்டம் அஹிம்சை என்ற யுத்தபகவான் போதித்த கோட்பாட்டிலேயே நடைபெற்றது தமிழ்நாட்டில் குறள் இதனையே வற்புறுத்தியது.

அஹிம்சை! அது எவ்வாறு வெற்றி அளிக்குமென்று கேலிசெய்பவர்களுக்கு காந்தியின் பல் உடைக்கப்பட்டவாய் சாட்சியம் அளித்தது; இருப்பினும் அங்கும் இங்கும் சில வன்செயல்கள் நடந்தன அவற்றிற்கு என்ன பரிகாரம்?

"இறக்கும் வரைக்கும் உண்ணாவிரதம்! இறக்கும் தறுவாயில் எத்தனை முறைகள் - ஒருமுறை பிரிட்டிஷ் மந்திரிசபை விடுமுறையில் இருந்தபோதும் அவசரக் கூட்டம் நடத்தி காந்தி வற்புறுத்திய முடிவை கொடுத்தது. மயிரிழையில் ஊசலாடிய உயிர் பழரசத்தினால் புத்துயிர்பெற்றது. மறுகன்னத்தைக் கொடுக்கமுன் வந்த யேசுநாதரின் இரண்டாவது பதிப்பு இது.

இந்தியாகாந்தி; காந்திஇந்தியா என்ற நிலையில் காந்தி இறப்பதை எவ்வகையிலும் தடுக்கவேண்டுமென்ற ஏகோபித்த கருத்து துடிப்புடன் செயற்பட்டது.

பிள்ளையின்நோய்க்குதாய் மருந்துஉண்பதுபோல் எவர் செய்த தவறையும் தன் தலையில் போட்டதால் அஹிம்சையின் அவதாரம் என்று கொள்ளப்பட்டது.


'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்'

இதுவே சுதந்திர இந்தியா தலைநிமிர்ந்து நிற்பதன் ரகசியம்.

## சத்துணவு நிலையங்கள்

(புலோலி)

வடமராட்சிப்பகுதி கரையோர மீனவ குடும்ப சிறுவர்கள் பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிகளுக்கு போஷாக்குச் சத்துணவுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் நெப்பாளு நிறுவனம், சர்வோதய இயக்கம், குழந்தைகள் பராமரிப்பு நிலையம் ஆகியன இணைந்து சென் ஜோன் அம்புலன்ஸ் படையினரின் உதவியுடன் ஏழு சத்துணவு நிலையங்களை ஆரம்பித்துள்ளன



# மகாத்மா என்றொரு மனிதர்!

சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், சாத்வீகப் போராட்டம் என்பவைகள் அன்று இந்திய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக மகாத்மா காந்தியால் பயன்படுத்தப்பட்ட கருவிகள். இன்று அவை கேலிக்குரியவைகளாக கருதப்பட்டாலும் கொலைக் கருவிகளைவிட சக்திமிக்கவை என நடைமுறையில் சாதித்துக் காட்டினார் காந்தி. அதற்காக அவர் மேற்கொண்ட விரதங்களும் சோதனைகளும் அனந்தம்.

36 நூல்களுக்கு மேல் எழுதி உலகப் புகழ்பெற்றவரான "லியோ ரேஸ்டன்" என்பவரின் ஆங்கிலக் கட்டுரையொன்றைத் தழுவித் தொகுக்கப்பட்ட இக்கட்டுரை காந்தி ஜெயந்தியையொட்டி இன்று வெளியிடப்படுகின்றது.

– பி. எஸ். பி.

மெலிந்த உடல், வழுக்கைத் தலை, உடலைச் சரியாக மூடி மறைக்காத மேல்ஆடை, கௌபீனமாக வரிந்துகட்டிய வேட்டி, பொக்கை வாயில் புன்னகையுடன் அந்த மனிதர் 24 நாட்கள் நடந்தார். பம்பாய் நகரின் வடபால் உள்ள தண்டியை நோக்கிய பாதையில் 240 மைல்களை இவ்வாறு நடந்து கடந்தார் அவர்.

இங்கிலாந்தின் மேலாதிக்கவாதிகளுக்கு எதிரான அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அவருக்குப் பின்னால் ஆயிரம் ஆயிரமாக மக்கள் திரண்டார்கள்; நாடு எழுச்சி பெற்று எழுந்தது. ஆட்சியாளர் அதிர்ச்சியுற்று மிரளஆரம்பித்தார்கள்.

இந்த யாத்திரையை ஆரம்பிப்பதற்கு முன்னர் காந்திஜி இந்திய வைஸ்ராய்க்கு பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். தாம்சட்டத்தைவேண்டுமென்றே மீறப் போவதாக தண்டியில் விளையும் உப்பில் ஒரு பிடி அளவைசட்டவிரோதமாக அள்ளி எடுக்கப்போவதாக அவர் அறிவித்திருந்தார்.

அக்காலத்தில் உப்பு விளைச்சல் ஆங்கில அரசின் ஏகபோக உரிமையாக இருந்தது. எந்த ஒரு இந்தியனும் அதில் கை வைக்க அனுமதிக்கப்படுவதில்லை.

தது. நிலத்திலும், சாக்கடைகளிலும் சத்தியாக்கிரகிகள் முனகியபடியும் மூர்ச்சையுற்ற நிலையிலும் கிடந்தார்கள்.

### திருப்பு முனை

1930 மே 21ம் திகதி இது நடந்தது. உப்பு யாத்திரை - அல்லது தண்டி யாத்திரை இந்தியாவின் சுதந்திர வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் குழப்பத்தை மூட்டுபவர் என்று வர்ணிக்கப்பட்டார்.

நாட்டின் சகல பகுதிகளுக்கும், கிராமங்கள், பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று மக்களை சுதந்திரப் போராட்டங்களுக்குத் தயார் படுத்தினார். அமைதி வழி ஒத்துழையாமைப் போராட்டம் என்ற புரட்சிகர ஆயுதத்தை அவர்களிடம் கையளித்தார்.

இந்தியாவின் மிகக் கேவலமான பகுதிகளிலெல்லாம் அவர் தோன்றினார். பெரும் திரளான மக்கள் மத்தியில் பேசினார் சில சமயம் உயர்ந்த மேடையில் கால்களை மடித்து அமர்ந்து வெகுநேரம்வரை அமைதியாய் இருப்பார். அதில் கட்டுண்டு மக்களும் அமைதியாய் இருப்பார்கள்: முறைப்படியான பதவி எதையும் அப்போது அவர் வகிக்கவுமில்லை ஆயுதந்தரித்த வீரர்களை பணியாளர்களாய் கொண்டிருக்கவு

சத்தில் ஈடுபட்டிருந்த இந்திய முஸ்லிம் கம்பனியொன்று ஒரு வழக்கில் தமக்காக சார்பில் பணியாற்றுவதற்கென காந்தியை அங்கு அனுப்பியது அங்கே இடம் பெற்ற சம்பவங்கள் காந்தியின் வாழ்க்கைமுறையையே மாற்றி அமைத்து விட்டன;

பிரிட்டோரியாவுக்கு ரயில் வண்டியில் செல்வதற்கு முதல் வகுப்பு டிக்கட் பதிவு செய்திருந்தது அவரை அனுப்பிய கம்பனி.

பீட்டர் மரிட்ஸ்பர்க் என்ற இடத்தில் முதல்தடவையாக வண்டி நின்றபொழுது அந்தப் பெட்டிக்குள் ஐரோப்பியர் ஒருவர் நுழைந்தார். அங்கே எவனதான ஆங்கில பாணியில் உடை தரித்து சுத்தமான ஆங்கிலம் பேசிய போதிலும் வெள்ளையர் அல்லாத ஒருவரைப்பார்த்ததும் அவருக்கு ஆத்திரம் பொங்கியது. "கேவலம் ஒரு கூலிப்பயலோடு சமமாக இருந்து ரயில் பெட்டியில் பிரயாணம் செய்வதா என அவன் வெகுண்டான். ரயில் நடத்துனரைக் கூப்பிட்டான். காந்தியை சரக்கு ஏற்றும் பகுதிக்கு செல்லும்படி பணித்தான் நடத்துனர். காந்தி கண்டிப்பாக மறுத்துவிடவே வெளியில் தூக்கி எறியப்பட்டார்;

இந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட அவமானம் "எனது வாழ்க்கையில் மிகவும் செயல் பூர்வமான ஒரு அனுபவமாக அமைந்தது. அந்த நாவிலிருந்தே எனது சாத்வீக ஒத்துழையாமை போராட்டம் முளைப்புப்பெறலாயிற்று" என்று கூறுகிறார் காந்திஜி.

தென்னாபிரிக்க அதிகாரிகளுக்கு எதிராக அமைதிவழியில் ஒத்துழையாமைப் போராட்டத்தை நடத்துமாறு அங்கிருந்த இந்தியர்களையும் வெள்ளையர் அல்லாதவர்களையும் அழைத்தார் காந்தி. பேர

தண்டியாத்திரையின் இறுதியில் காந்திஜி குனிந்து ஒருபிடி உப்பை அள்ளி எடுத்து உயர்த்திப் பிடித்தார்.

ஒரு பொலிஸ்காரரும் அந்த இடத்தில் தோன்றவில்லை. எனவே போராட்டம் இன்னும் வேகம் பெறவேண்டுமென்று காந்தி கருதினார். எனவே தாமும் தமது தொண்டர்களும் அரச உப்புக்களஞ்சியத்திற்குள் பிரவேசித்து உப்பை எடுக்கப் போவதாகக் காந்தி அறிவித்தார். இச்சமயம் அவர் கைதானார்.

உப்பளத்தில் 400பொலிசார் குண்டாந்தடிகளுடன் காத்திருக்க 2500 காந்தியத்தொண்டர்கள் அங்கே படையெடுத்தார்கள். காத்திருந்த பொலிசார் கண்மூடித்தனமாக அவர்களை அடித்துத்தள்ளினார்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த 'யுனைட்டட் பிரஸ்' நிருபர் வெப் மில்லர் (Webb Miller) இதுபற்றிப்பின்வருமாறுஎழுதினார்: "சத்தியாக்கிரகிகளில் ஒருவராவது குண்டாந்தடிகளைத் தவிர்த்துக்கொள்ளும் விதத்தில் ஒரு கையையாகுதல் உயர்த்தவில்லை. ஒவ்வொரு அடியையும் முனகலோடும் மூச்சை அடக்கிக்கொள்வதன் மூலமும் தாங்கிக்கொண்டு கீழே அடித்துத் தள்ளும்வரை முன்னேறினார்கள்."

இந்தக் கோர நிகழ்ச்சி இரண்டு மணி நேரம் நீடித்

மில்லை: ஆனால் முழு இந்தியாவையுமே ஒரு வினாடியில் முடக்கிவிடச்செய்யும் சக்தி அவரிடம் இருந்தது.

காந்திஜியின் உண்ணாவிரதம் டில்லி அரசை மாத்திரமல்ல, இங்கிலாந்தின் ஆட்சியாளர்களையே கலக்கியது. இந்த மனிதர் பட்டினியால் இறக்கநேர்ந்தால் இந்திய நாடுமுழுவதும் என்ன நடக்குமோவென்ற அச்சம் அவர்களைப்பிடித்து ஆட்டியது;

★ ★

மோகனதாஸ் கரம்சந் காந்தி போர் பந்தரில் 1869-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் திகதி பிறந்தார்.

இதிகாச புருஷனான ஸ்ரீராமனையும் சத்திய விரதனான ஹரிச்சந்திரனையும் உதார புருஷர்களாக கொண்டார் காந்தி 13 வயதில் அதே வயதினரான கஸ்தூரிபாயை காந்தி மணமுடித்தார். சட்டம் படிப்பதற்காக இங்கிலாந்து சென்ற காந்தி அங்கே ஆங்கில நடையுடை பாவனைகளில் நன்கு பரிச்சயமானார் ஆங்கிலத்தில் உரையாற்றும் பயிற்சி பெற்றுக்கொண்டதோடு பிரெஞ்சு மொழியும் கற்றார். நடனப்பயிற்சியும் பெற்றார்.

மூன்றாண்டுகள் லண்டனில் கழித்தபின் பரீட்சையில் சித்தியடைந்து இந்தியா திரும்பினார்.

தென்னாபிரிக்காவில் வர்த்த

றினார் டால்ஸ்டாய், அமெரிக்க சிவில் உரிமைப்போராட்டக்காரர் வழக்கறிஞர் ஹென்றி டேவிட்தோரோ ஆகியவர்களின் நூல்களைப் படித்ததின் மூலம் இந்தப் புதிய சாத்வீகப் போராட்டத்தத்துவத்தை உருவாக்கிக் கொண்டார் காந்தி

தென்னாபிரிக்க அரசின் ஓரவஞ்சகமான சட்டங்கள் பலவற்றை எதிர்த்து போராட்டம் நடத்தினார் காந்தி இந்தியரின் பிரயாணங்களின் மீதான கட்டுப்பாடுகள் வேலைதிருத்தங்கள் சட்டவிரோதமாக்கப்பட்டமை, கிறிஸ்தவ முறையிறான திருமணங்களை மாத்திரமே சட்டபூர்வமாக்கியமை போன்ற நடவடிக்கைகளை எதிர்த்து அவர் நடத்திய போராட்டத்தில் 50 000இந்தியர்கள்சேர்ந்துகொண்டார்கள் ஆபிரிக்கஅரசு வேறுவழியின்றி சீரமைப்புச் சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியேற்பட்டது.

### இந்தியா வந்தார்

1915 ம் ஆண்டு-22 ஆண்டுகள் தென்னாபிரிக்காவில் செய்து வந்த தமது சட்டத்தரணி தொழிலைக் கைவிட்டு இந்தியாவுக்குப் புறப்பட்டார்;

(7ம் பக்கம் பார்க்க)

வேலையாட்களுக்கு

# வெற்றிடம்

கொழும்பு சாமுவேல் அன் கம்பனியாரின் நிர்வாகத்தில் அமைக்கப்பட்டுவரும் மன்னார்-வங்காலை- முருங்கன்- அடம்பன் (மாந்தை) நீர் விநியோகத் திட்டத்தில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவிகளில் வெற்றிடமுண்டு.

★ தச்சுவேலை செய்பவர்கள்

★ மேசன்வேலை செய்பவர்கள்

நேர்முகப் பரீட்சையில்லை. தகுதிகாண் நிலையில் வேலைக்கு அமர்த்தப்படுவர். நேரில் வரவும்.

நிர்மாண முகாமையாளர்

சாமுவேல் அன் கம்பனி

(தண்ணீர் தொட்டி. நிர்மாணப்பகுதி)

நீர் விநியோக தொட்டி நிர்மாண

வேலைத்தளம் -மன்னார்


# அந்தியேட்டி அழைப்பிதழ்



அன்னைமடியில்

23–6–1927

அரனார் திருவடியில்

20–8–1985

அன்புடையீர்

20-8-85 அன்று சிவபாதம் அடைந்த எங்கள் அன்புத் தந்தையார்.

(உரிமையாளர் யாழ் கார்ப்பரேசன், மணியம் மில் பரந்தன்)

திரு. ஆறுமுகம் கந்தையா சுப்பிரமணியம்

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 4-10-85 அன்று வெள்ளிக்கிழமை காலை 6·00 மணிமுதல் எங்கள் இல்லத்தில் நடைபெறும் இக்கிரியைகளின் போது தங்களை சமூகமளித்து அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சிவமணி வாசா"

புற்றளை,

புலோலி தெற்கு, புலோலி. (1004)

# 16-ம் நாள் நினைவஞ்சலியும் (மோட்ச தீபமும்)

2-10-1985

சிவத்திரு மதி கமலாட்சி அம்மா வல்லிபுரம்

(காங்கேசன்துறை)



அவதாரம்:

23-3-1922

சமாதி:

17-9-1985

எம் அன்புத் தெய்வமே! எம்மைக்காத்த கருணையின் வடிவமே! இல்லைக் கூற்றனுடன் இரண்டறக் கலந்த பேரொளியே தங்கள் ஆத்மா சாந்தியடைய அவன் பாதாரவிந்தங்களில் மலர் தூவி வேண்டுகின்றோம்.

அன்பின் தலைமகன்

வ. குமாரசாமியும் மற்றும்

மக்களும், மருமக்களும்.

"அருளொளி"

காட்டடைப்பு வீதி,

காங்கேசன்துறை. 1027

## காந்தி நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தி பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை காலை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் காந்தி நினைவுப் பேருரை இடம்பெறும்.

வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் சரித்திர ஆய்வாளர், சைவப் புலவர் திரு க.சி. குலரத்தினம் பேருரை நிகழ்த்துவார்.

இன்று மாலை நிகழ்ச்சியாக இவ்வித்தியாலயத்தின் 'கவின் கலை மன்றம்' நாடகங்கள் பற்றிய கருத்தரங்கு ஒன்றினை நடத்தும். இக்கருத்தரங்கில் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை பங்குபற்றுவார். (ஐ)

## ரூபா ஒன்றரை லட்சம்

(1-ம பக்கத்தொடர்ச்சி)

பொருட்களையும் கொள்ளை அடித்துள்ளனர்.

நாரந்தனையைச் சேர்ந்த ஜஸ்டின் அல்பிரட் என்பவர் வீட்டில் நேற்று முன்தினம் இரவு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

இரு வாகனங்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவ் வீட்டிலுள்ள ஒரு ரி. வி., 2 டெக், 2 வானொலி, மேசை மின் விசிறி மற்றும் நகைகள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## வயோதிபர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பஸ்தர்கள் விபரம் வருமாறு:-

கந்தசாமிக் குருக்கள் (வயது 44), முருகையா (வயது 42), தம்பிராசா ஆறுமுகம் (வயது 38, இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்), சிற்ஸ்கந்தராசா (வயது 2?), செல்லத்துரை பத்மநாதன் (வயது 35). சுப்பிரமணியம் விஜயரட்ணம் (வயது 35), சுப்பிரமணியம் வயிரமுத்து (வயது 48), இராசையா சபாரத்தினம் (வயது 48). (ப-மா)

## தமிழ்க் குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராமசந்திரனை நேற்றுப் பகல் சந்தித்து இலங்கை இனப் பிரச்னை சம்பந்தமாக சுமார் ஒருமணிநேரம் விவாதித்தார்.

இந்தச்சந்திப்பு மின்சாரத் துறை அமைச்சர் திரு எம். இராமச்சந்திரன் இல்லத்தில் நடைபெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களையும் ஈழ தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த அமைப்பு பிரதிநிதிகளையும், இதர இலங்கைத் தமிழ்த் தீவிரவாதக் தலைவர்களையும் திரு மந்தாயி இன்று சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

## வீடுகளைப் பார்க்கச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பம் குடும்பமாகத் தங்கியிருப்பது தெரிந்ததே.

திருமலையில் உள்ள முகாம்களில் தங்கியிருக்கும் சிலகுடும்பப் பெண்கள், தங்கள் கணவன்மாரை வீடு பார்க்க அனுப்பினால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சி தாங்களாகவே புறப்பட்டு விடுகிறார்கள்.

லிங்கநகரில் உள்ள வீடுகளைப் பார்க்கச் சென்ற சில பெண்களும் ஊர்காவல் படையினரால் அவமானப்படுத்தப்பட்டு விரட்டியடிக்கப்பட்டனராம்.

இது இவ்வாறிருக்க ஆளரவம் இல்லாத தமிழர்களின் வீடுகளிலுள்ள மேற்கூரைத் தடுகள், வளைகள், சலாகைகள் மற்றும் தளபாடங்களை மற்றவர்கள் பெரும் சிரமத்தின்பேரில் பிரித்தெடுத்து வாகனங்களில் ஏற்றிச்செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-மா)

## கிராமங்களை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 6 நாட்களாக பல கிராமங்களுடாகப் பாதயாத்திரை செய்துவிட்டு நேற்று முன்தினம் இரவு அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் இராப்பொழுதைக் கழித்தனர்.

நேற்றுக்காலை அங்கு தமது காலைக்கடன்களை முடித்துவிட்டு 8-45 மணியளவில் மீண்டும் யாத்திரை செய்யத் தொடங்கினர்.

வித்தியாலய மாணவர்களும் அப்பகுதி பொதுமக்களும் பாதயாத்திரைக் குழுவினருடன் சேர்ந்துகொண்டனர்.

பருத்தித்துறை - யாழ். வீதியூடாகச் சென்ற குழுவினர் கிராமங்களுக்குள் இறங்கி யாத்திரை செய்தனர். அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தை குழுவினர் அடைந்தபோது அங்குள்ள மக்கள் அவர்களை வரவேற்று தேநீர் விருந்துபசாரமளித்து தமது ஆதரவைத் தெரிவித்துக்கொண்டனர்.

குடிசைவாழ்மக்களும் தத்தம் வீட்டு வாசல்களில் ஒழுமி நின்று பாதயாத்திரைக் குழுவினரை வரவேற்று தாகசாந்தி அளித்தனர்.

பின்னர் பாதயாத்திரைக் குழுவினர் ஆவரங்கால், புத்தூர் சுன்னாகம்வீதி ஊடாக வேம்பிராய் கலைமதி சனசமூக நிலையத்தை அடைந்ததும் அப்பகுதி பொதுமக்கள் அன்புடன் வரவேற்று உபசரித்து மதியபோசனம் வழங்கினர்.

வயிறார உண்டவர்களுக்கு செவியார 'நாமார்க்கும் குடியல்லோம்' வில்லிசை நிகழ்ச்சியை கலாசாரக்குழுவினர் அளித்தனர்.

சற்றுநேரம் ஓய்வெடுத்துக் கொண்டு புறப்பட்ட பாதயாத்திரைக்குழு நேற்று மாலை 6 மணியளவில் நீர்வேலி கந்தசுவாமி கோவிலடியைச் சென்றடைந்தது.

## மாயமான்' 100-வது நிகழ்ச்சி

நீர்வேலிக்கந்தசுவாமிகோவில் முன்றலில் பெரும் தொகையான மக்கள் கூடியிருந்து பாதயாத்திரைக் குழுவினருக்கு தங்கள் ஆதரவை நல்கியவண்ணமிருந்தனர்.

கலாசாரக் குழுவினர் கலை நிகழ்ச்சிகளை அங்கு அளித்துக் கொண்டிருந்தனர்

நூறாவது தடவையாக 'மாயமான்' தெருக்கூத்து நாடகம் இங்கு மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. மற்றும் 'நாமார்க்கும் குடியல்லோம்' வில்லிசை, கருத்தரங்கு ஆகியனவும் இடம்பெற்றன.

நேற்று மப்பும் மந்தாரமுமாக வானம் இருந்தபடியால் பாதயாத்திரைக் குழுவினர் முகத்தில் தெம்பு காணப்பட்டபோதிலும் நெடுந்தூரம் நடந்த களைப்பு அவர்களை சோர்வடையச் செய்திருந்தது.

இன்றுகாலை ஏழாவது நாளாக இருபாலையைநோக்கி பாதயாத்திரை செய்யும் யாழ். பல்கலைக்கழக மாணவ மாணவிகள் அடங்கியகுழு புறப்படும்.

திட்டமிட்டபடி 8-வது நாளான நாளை வியாழக்கிழமை இருபாலையிலிருந்து யாழ். பல்கலைக் கழகத்தை நோக்கிச் சென்று யாத்திரையை முடித்துக் கொள்ளும். (மா)

## பொத்துவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலையில் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். தாக்குதல் காரணமாக ஒரு பொலிஸ் காரருக்குக் காயமேற்பட்டுள்ளது தாக்குதலை மேற்கொண்டவர்கள் வள்ளம் ஒன்றினமூலமாகத் தப்பிச் சென்றுள்ளனர்" என்று மேற்படி அறிக்கை கூறுகிறது (வ)

## 59 தீவிரவாதிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கோணிப்பையுடன் பிரசுரங்கள், ஒரு மோட்டார் சைக்கிள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட "கிறினைட்" டுகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி முத்துச்சாமி

(கூட்டுறவுச் சங்க பணியாளர், நீர்வேலி)

மலர்வு:

15-01-1952

★

உதிர்வு:

02-09-1985



அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து மீளாத் துயரில் எங்கள் அனைவரையும் ஆழ்த்திவிட்டு 02-09-1985 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எனது கணவரின் ஈமக்கிரியைகளின் போது அனுதாபச் செய்தி அனுப்பியோர்க்கும், நேரில் சமூகம் தந்து அனுதாபம் தெரிவித்த அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோரோடு உதவி ஒத்தாசை புரிந்த ஏனையோருக்கும் எங்களின் நன்றியறிதல்களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதோடு அதேவேளையில் 02-10-85 புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண வைபவங்களிலும் மதிய போசனத்திலும் குடும்பசமேதரராய் கலந்து சிறப்பித்தேகுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இப்படிக்கு

மனைவி, மகன்

தாய் சகோதரர்கள்

மற்றும் உற்றார் உறவினர்கள்

பூதர்வளவு

அச்செழு

நீர்வேலி.

(1024)

[5]

# பிள்ளைகளைபணயம்வைத்து நகைகளைக் கேட்டார்கள்

அடர்ந்து படர்ந்து வளர்ந்திருக்கும் ஆலமரத்தைத் தறிக்கவேண்டும் என்றால் முதலில் கிளைகளைத் தறித்தபின் கொப்புகளை வெட்டி அதன் பின் மரத்தை ஆணிவேருடன் வெட்டி விழுத்தவேண்டும். இதுதான் இன்று தமிழர்களுக்கு நடந்துகொண்டிருக்கிறது.

கச்சேரிக்கு அலுவலாக வந்த ஒரு வயோதிபர், அவரைச் சுற்றி நின்ற சிலரிடம் மேற்கண்டவாறு கூறினார்: எனக்கு அது விளங்காததினால் தொடர்ந்து அவ்விடத்தில் நின்றேன்.

'திருமலை, மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி எங்கும் தமிழர்களை அகதிகளாக்கி விட்டு கடைசியாகத்தான் யாழ்ப்பாணத்தில் என்று அந்த வயோதிபர் தொடர்ந்தார். இப்ப எனக்கு கொஞ்சம் விளங்கியது.

அதனை தடுக்க என்ன செய்ய வேண்டும்?-இது பக்கத்தில் நின்ற ஒருவரின் கேள்வி

'வெட்டிய கொப்புகளையும் கிளைகளையும் எடுக்காமல், மரத்தடியில்விட்டால் மரத்தைத் தறிப்பது கஷ்டமாக இருக்கும்; தறிக்க 'முடியாது' என்றார் அந்தவயோதிபர். அகதிகளாக்கப்பட்டவர்கள். வேறு இடங்களுக்கு போகாமல் அந்தந்த இடங்களில் அகதிமுகாமில் இருக்கவேண்டும்' என்று தொடர்ந்து கூறினார். அவர் கூறியதில் உண்மை இருந்தது.

திருகோணமலைக்கு அண்மையில் உள்ள குச்சவெளி,

இருக்கும்போது ஞாயிற்றுக்கிழமை காலை நாலேமுக்கால் மணிக்கு வெடிச்சத்தம் கேட்டது உடனே பிள்ளைகளையும் கொண்டு வெளியே ஓடிவந்தோம். யூனியனுக்கு நேரே நாலு பேரை ஒரு கோஷ்டியினர் சுட்டார்கள். நாங்கள் ஓடிவந்தோம். எங்களையும் நோக்கிச்சுட்டார்கள். நாங்கள் தப்பிவிட்டோம். தோட்டத்திற்குள் புகுந்து காட்டு வழியாகபோகும்போது இடையில் எங்களை சிலர் மறித்துவிட்டார்கள். நாங்கள் திருப்பி வந்து வரதராஜன் வீட்டில் இருந்தோம். அவர்கள் எங்களைச் சுற்றிவளைத்து தடுத்து நிறுத்தினார்கள். 100 பேருக்கு மேல் நாங்கள் அகதிகளாக்கப்பட்டு விட்டோம். பெண்களை வேறாகவும். ஆண்களை வேறாகவும் வைத்துச் சோதித்தார்கள். அங்கிருந்த சில சாமான்களை எடுத்து 'நாங்கள் தீவிரவாதிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக கூறித் துன்புறுத்தினார்கள். ஆண்கள் எல்லோரையும் தங்களுடன் கூட்டிக்கொண்டு போனார்கள்.

அவர்களுக்கு என்ன நடந்ததென்று தெரியாது. எங்களைக் கொண்டு வந்து திரும்பவும் அகதிமுகாமில்விட்டார்கள்.

## வடக்கு நோக்கி வரும் திருமலை அகதிகள்

– கா. யோகநாதன் –

அங்கு நடந்த தாக்குதலின் போது நிலாவெளியில் அகதியாக வந்தடைந்தார்கள் பலர். நிலாவெளியில் அமைக்கப்பட்ட அகதிமுகாம்களில் பலர் தஞ்சமடைந்தனர். அங்கிருந்து முல்லைத்தீவு மாதா கோவில் முகாமிற்கு வந்தடைந்துள்ள ஒரு பெண்மணி அங்கு நடந்தவற்றை கூறுகிறார். குச்சவெளியில் நடந்த பிரச்சனையின்பின் காட்டுவழியாக 16 நாட்களாக திரிந்து, அலைந்து நிலாவெளி என்ற கிராமத்தை வந்துசேர்ந்தோம். நிலாவெளி மக்கள் நல்லமாதிரி ஆதரித்தார்கள் அங்குள்ள முகாமில் தங்கியிருந்தோம். நாங்கள் இருந்த முகாம் கிராமக்கோடு அக அகதிமுகாமில் விடும்நேரத்தில் யூனியனுக்கு கிட்ட இருவர் கொளுத்தப்பட்டனர் இதனை என் கண்களால் பார்த்தேன் ஒருநேரத்தில், எங்களுடன் வந்த சுப்பிரமணியத்தின் மகனை சுட்டார்கள். அதற்குப்பிறகு நிலாவளி அகதி முகாமில் இருந்தோம். அங்கு இருக்கப் பயப்பட்டோம். அங்கிருந்துபுறப்பட்டு கடற்கரைக்கு வந்தோம் அங்கு வள்ளத்தில் வந்தவர்கள் எங்களை ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவுக்கு வந்தார்கள்

முல்லைத்தீவு மாதா கோவில் அகதிமுகாமில் ஆயிரக்கணக்கான அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். பொதுமக்களாலும் பொது ஸ்தாபனங்களாலும் இவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு அரசாங்க அதிபரும் அடிக்கடி தொடர்புகொண்டு தேவையானவற்றை செய்துவருகிறார் மாதாகோவில் முகாமில்மட்டுமன்றி மற்றும் மூன்று முகாம்களிலும் அகதிகள் தொகை அதிகரித்துள்ளது.

மாதாகோவில் முகாமில் திருமலையிலிருந்து வந்த மீனவர்கள் பலர் தங்கியுள்ளார்கள். புளியங்குளம் என்ற கிராமத்திலிருந்து வந்த மீனவர் ஒருவர் என்ன சொல்கிறார் பார்ப்போம். 3 மீனவர்களுடன் கடலுக்கு யந்திரப் படகில் சென்றோம்: 4ம் தேதி கரைக்குத் திரும்பிவந்தோம். குண்டர்கள் எங்களை அடித்து வதைத்து ஓடும்படி கூறினார்கள். வெடிவைத்தார்கள் நாங்கள் பயந்து முஸ்லிம்களின் பாடசாலையில் தஞ்சமடைந்தோம். அங்கிருந்து அடுத்தநாள் சிறு படகுமூலம் எங்கள் கிராமத்தில் வந்து இருந்தேன் அங்கும் இருக்க முடியவில்லை 'சோரன்காட்டில்' சிறுபிள்ளைகளையும் பெரியோர்களையும் சுட்டார்கள். பயத்தில் நாங்கள் நிலாவெளிக்கு வந்து ஒரு வீட்டில் ஒருமாதமாக இருந்தோம்.

பின்னர் அங்கு ஒரு கோஷ்டியினர் வந்து பயமுறுத்தினார்கள். வெடிவைத்துச் சுட்டு. ஓடச்சொன்னார்கள்; நாங்கள் காட்டுவழியாக ஓடி, சாப்பாடின்றி கஷ்டப்பட்டு கடைசியில் திம்புறுப்பிட்டிக்கு வந்து சேர்ந்தோம். அங்கும் எங்களை இருக்கவிடாமல் சிலர் வந்து துன்புறுத்திக்கொண்டு இருந்தார்கள். அடுத்தநாள் காலை நிலாவெளிக்கு வந்துபார்த்தோம். சிலர் இறந்துகிடப்பதை நான் கண்டேன். எனக்கு அதிகம் பயம் ஏற்பட்டது என் பிள்ளைகளையும் கட்டிக்கொண்டு, என்ன செய்வது என்று இருக்கும்போது எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் முல்லைத்தீவுக்குகூட்டிவந்தார்.

பன்குளத்தைச் சேர்ந்த பல குடும்பங்களும் முல்லைத்தீவுக்கு வந்துள்ளார்கள். பன்குளத்தில் என்ன நடந்ததென்பதை குடும்பஸ்தர் ஒருவர் இங்கு கூறுகிறார் 'நான் பன்குளத்தில் 4ம் கட்டை என்ற இடத்தில் வசித்தேன் அங்கிருந்து கொள்ளைக்கோஷ்டியினர்வந்து எங்கள் வீட்டிலுள்ள பொருட்களைக் கொள்ளையடித்தார்கள். ஆடுகள், மாடுகள், கோழிகளைக் கொண்டுசென்றார்கள் நாங்கள் பன்குளத்திலிருந்து 15 மைல் காடுகளில் நடந்து நிலாவெளியை வந்தடைந்தோம் நிலாவெளி அகதி முகாமில் தங்கியிருந்தோம் அங்கிருந்து வள்ளத்தின்மூலம் வந்தோம.''

திருக்கடலூரில் பாதுகாக்கப்பட்டு. முல்லைத்தீவு வந்துள்ள பெண்மணி ஒருவர் தனக்கு நடந்தவற்றைகூறுகிறார்:'திருக்கடலூரில் இருக்கும்போது ஒரு நபரைச் சுட்டுக் கட்டியிருந்தார்கள் காடையர்கள் புகுந்து கத்தியாலும், கோடரியாலும் வெட்டுவோம்' என்று பயமுறுத்தினார்கள். நாங்கள் உயிருக்குப் பயந்து, வள்ளங்களில் நிலாவெளிக்கு வந்தோம் அங்கு ஒருநாள் ஒரு கோஷ்டியினர் வந்து ஓடச்சொல்லிப் பயமுறுத்தினார்கள் நாங்கள் ஓடிக்கொண்டிருக்கும்போது எங்களையும் 3 ஆண் குழந்தைகளையும் மறித்துவிட்டார்கள். எங்களைக் கொண்டுபோய் பயமுறுத்தி 3 ஆண்பிள்ளைகளின் நெஞ்சில் துப்பாக்கியைவைத்துக்கொண்டு 'லொக்குக் கொட்டியா' அவர்களைச் சுடுவோம்'' என்றார்கள். எங்களின் பிள்ளைகளின் உயிருக்காக, சுடவேண்டாம் என்று மன்றாடினோம் அவர்கள் 'நீங்கள் போட்டிருக்கிற காதணிகள், தாலிகள் எல்லாவற்றை தரும்படி சொன்னார்கள். நாங்கள் கொடுக்க மறுத்தோம் அப்போது பிள்ளைகளை அவர்கள் திரும்பவும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தினார்கள் நாங்கள் உயிருக்குப் பயந்து தாலிகளையும், சங்கிலிகளையும், தோடுகளையும் அவர்களிடம் கொடுத்தோம்: எங்களுடன் இன்னுமொருதமிழ்க்குடும்பமும் இருந்தது. பிறிமா ஆலையில் வேலைசெய்யும் நபருமிருந்தார் அவரிடம் 25 000 ரூபா இருந்தது. அதனையும்பயமுறுத்திப் பறித்து எடுத்துக்கொண்டார்கள். பிள்ளைகளுக்கு உயிர் தப்ப நாங்கள் ஓட முயற்சித்தோம். எங்களை இருக்கச் சொன்னார்கள் எல்லா இடமும் வெடிச்சத்தம்கேட்டது பிள்ளைகள் பயந்து கத்தினார்கள். கத்தினால் பிள்ளைகளைச் சுடுவோம் என்றார்கள். நாங்கள் பிள்ளைகளின் வாயையும் மூக்கையும் பொத்தினோம் நகைகளையும் கேட்டபோது முதலில் நாங்கள் கொடுக்க மறுத்தோம் அப்போது 'எட்டிப்பாருங்கள், கடற்கரையில் உங்கள் ஆட்களைச் சுட்டுப் போட்டிருக்கிறோம்' என்றார்கள். நாங்கள் கம்பி வேலியால் எட்டிப்பார்த்தோம் பக்கத்து வீட்டு பாஸ்கர் என்ற பொடியனை சுட்டுப்போட்டிருந்தார்கள். நெஞ்சிலும் வயிற்றிலும் இரத்தம் கொப்பளித்துக்கொண்டிருந்தது 'நகைகளைத் தராவிட்டால் இப்படித்தான் உங்களையும், உங்கள் பிள்ளைகளையும் சுடுவோம்' என்று பயமுறுத்தினார்கள்; அதற்குப் பிறகுதான் நகைகளைக் கொடுத்தோம். 3 மணிக்கு திரும்பிப் பார்க்காமல் ஓடும்படி அவர்கள் துரத்திவிட்டார்கள். பிள்ளைகளையும் கட்டிக்கொண்டு கம்பிவேலியால், முள்பற்றைகள் கிழிக்கிற. இரத்தம் வழிந்தோடக் இறக்கண்டி என்ற இடத்திற்கு வந்தோம் அங்கிருக்கின்ற முஸ்லிம்கள் இங்கிருந்தால் உங்களுக்கு ஆபத்து வரலாம் என்று சொன்னார்கள். நாங்கள் அங்கிருந்து பல நாட்கள் அலைந்து முல்லைத்தீவுக்கு வந்து சேர்ந்தோம். இங்கு உணவு தந்து எங்களை நல்லமுறையில் கவனித்து வருகிறார்கள்.

(தொடரும்)

## மௌனப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

முன்னாள் மானிப்பாய் எம். பி. திரு வி. தர்மலிங்கம் மரணமான ஒருமாத நிறைவு தினத்தையொட்டி, இன்று 2ம் திகதி தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் ஒரு மௌனப் பிரார்த்தனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இன்று மகாத்மா காந்தி நினைவுதினம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ் வரலாறும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிப்பது மிகவும் வரவேற்கத்தக்கதே உலகியல் சார்பில் அது மிகவும் வேண்டியதே. ஆயினும் ஆங்கிலத்தில் எழுதப்பேசத் தெரிந்திருப்பது ஒவ்வொரு மாணவருக்கும் அவசியமானதும். இதனையும் இவ்விடத்தில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன் என்றார்''

மாணவர்களுக்கான பரிசில்களைத் திருமதி மாலதி கந்தசுவாமி அவர்கள் வழங்கினார்கள்.

யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி திரு சு. விநாயகமூர்த்தியும் இவ்விழாவில் கலந்து கொண்டார் பரிசளிப்பு விழாவில் ஏராளமான பழைய மாணவர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

DAY CLASS
2-ம் பிரிவு
ஆரம்பம்: 10-10-85 காலை 8-00மணி
(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)
Pure and Applied } Maths திரு. நல்லையா
விபரங்களுக்கு:
NEW MASTER INSTITUTE
BMC LANE, JAFFNA.

மேற்கு பேர்லின், பிரான்ஸ், இத்தாலி
பிரயாணங்கள்
OCTOBER 7, 14, 28 திகதிகளில்
எமது பிரதிநிதி உங்களை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச் செல்கின்றார்
மற்றும்
கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா
போன்ற நாடுகளுக்கு விசா பெற்றுத் தரப்படும்.
மற்றும் சகல
விமான டிக்கட்டுகளுக்கும்
பாஸ்போட், பொண்ட், விசா
என்பனவற்றுக்கும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
இத்தாலி, பிரான்ஸ் செல்வதற்கு
முன்கூட்டி எம்முடன் கையெழுத்திட்டு தந்தவர்கள்
பிரயாண ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால்
உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்
லிப்ருஸ் லிமிட்டெட்,
R. G. கட்டிடம், 70, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

# மகாத்மா என்றொரு.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா என்பது ஒரு தேசமாக இருக்கவில்லை; பலவேறு விதமான நம்பிக்கைகள், மூடஎண்ணங்கள், சமயங்கள், கோட்பாடுகள், சாதிகள் மலிந்து கிடந்த நாடு அது. இங்கே அடிக்கடி சாதியின் பேரால், மதத்தின் பேரால் மோதல்களும் கொலைகளும் நடைபெற்று வந்தன. இன்றும்கூட இந்தியாவில் 312 மொழிகள் உள்ளன. அவைகளில் 15 மொழிகள் நிர்வாக மொழிகள். 1400 பேச்சு மொழிகளும் உள்ளன.

தீண்டப்படாதோர் பிரச்னையே இங்கு அதிர்ச்சியளிக்கும் விடயமாக இருந்தது. 5 கோடி மக்கள் இவ்வாறு சமூகக் குஷ்டரோகிகளாக நடத்தப்பட்டனர். கிராமிய வாழ்க்கை நடத்தவோ, பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கவோ, உயர் சாதியினரின் கோயில்களில் நுழையவோ அனுமதிக்கப்படவில்லை.

தொற்றுநோயினால் ஆயிரக்கணக்கானோர் இறந்துகொண்டிருந்தனர். அதே சமயம் கோடீஸ்வரர்களான மகாராஜாக்கள் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு மக்களை வதைத்து வந்தனர்.

இந்த இந்தியாவுக்குள்தான் காந்தி நுழைந்தார். "முழு இந்தியாவுமே என் குடும்பம்" என அவர் அறிவித்தார்.

ஆயிரமாம் ஒன்றை ஆரம்பித்து தீண்டத்தகாதவர்களையும் அனுமதித்தார். ஹரிஜனங்கள் என அவர்களைப் பிரகடனப்படுத்தினார்.

உயர் சாதிக்காரர்களின் எதிர்ப்பும் கோபமும் அவரை ஒன்றும் செய்துவிடவில்லை.

## பிரி பொருள் பகிஷ்கரிப்பு

பிரிட்டிஷ் பொருட்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கத்தை காந்திஜி ஆரம்பித்தார். கட்டுக்கடங்காதவிதத்தில் மக்கள் எழுச்சி கொண்டார்கள். சௌரிசௌரா என்ற கிராமத்தில் சத்தியாக்கிரகிகளுக்கும் பொலிசாருக்குமிடையில் மோதல்மூண்டது 22பொலிஸ்காரர்கள் அடித்துக்கொல்லப்பட்டனர்.

காந்திஜி அதிர்ச்சிக்குள்ளானார். போராட்டத்தை உடனே நிறுத்தினார். அஹிம்சாத்மீகத்துக்கு எதிராக நின்ற தலைவர்கள் வன்முறையின் மூலம் சுதந்திரத்தை விரைந்துபெற்றுவிடலாம் என்று கருதினார்கள். காந்தி அச்சுறுத்தலுக்குள்ளானார். சில இடங்களில் கல்லெறியும் விழுந்தது அதேவேளை இந்திய தேசிய காங்கிரஸின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக விளங்கினார். அவர் தேசபிதாவாகவும் உயர்ந்தார்

தத்துவவாதிகளும் மனம் மாறியவர்களும் அவரைச் சூழ்ந்து வந்தார்கள். "அவதாரம்" என்று மக்கள் போற்றினார்கள்

'என்னைக் கடவுளாக்காதீர்கள்" என்று அவர் தமது சீடர்களைக் கேட்டுக்கொண்டார்

பிரிட்டிஷாரை எதிரிகளாகக் கருதவேண்டுமெனப் பலர் வற்புறுத்தினார்கள் "இல்லை அவர்களுக்கு நாம் நீதிசெய்வோமானால் அவர்களின் ஆதரவை நாம் பெற முடியும்". என்றார் காந்தி.

★ ★ ★

## இரத்தக் களரி

முஸ்லிம் லீக் தலைவர் ஜனாப் முகம்மது அலி ஜின்னா அவர்கள் முஸ்லிம்களுக்கென தனி அரசு - பாகிஸ்தான் உருவாக்கப்படவேண்டும் என பலகாலமாகக் கோரிவந்தார் 'பிரிட்டிஷ் சர்வாதிகாரத்தின் இடத்தில் இந்து சர்வாதிகாரத்தை ஒருபோதும் ஏற்கமாட்டேன்" என ஜின்னா அறிவித்தார். 'இந்தியா பிரிக்கப்படுமானால் இரத்தக்களரி ஏற்படும். இரு சமூகங்களும் ஒருவரை ஒருவர் மதித்து ஒன்றாகவே வாழ்வோம்' என்றார் காந்தி.

1946 ஆகஸ்ட் 15-ம் திகதியை "நேரடி நடவடிக்கை தினமாக" அறிவித்தார் ஜின்னா. இதன் விளைவாக முன்னெப்போதையும்விட மோசமான இரத்தக்களரி ஏற்பட்டது. கல்கத்தா நகரில் இந்து - முஸ்லிம் குண்டர்கள் தாக்குதல்களிலும், கற்பழிப்பு, தீ வைத்தல் என வன்செயல்களிலும் இறங்கி வெறியாட்டம் ஆடினார்கள்.

நவகாளியில் ஏற்பட்ட இனக்கொந்தளிப்பை அடக்குவதற்கென 77 வயதான காந்தி கால்நடையாகப் புறப்பட்டார். நான்கு மாதங்கள் வெறுங்காலுடன் நடந்து அன்பைப் போதித்தார். அங்கே அமைதி திரும்பினாலும் வேறு மாகாணங்களுக்கு குழப்பம் பரவியது.

1947 ஆகஸ்ட் 15-ம் திகதி சுதந்திர இந்தியா உதயமாயிற்று. இந்துக்களும் சீக்கியரும் புதிதாக உருவாக்கப்பட்ட பாகிஸ்தானிலிருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்டனர். கிழக்குப் பஞ்சாப்பிலிருந்து முஸ்லிம்கள் மேற்கில் உதயமாகியுள்ள தமது புதிய தேசத்தை நோக்கி புறப்பட்டனர். இடையில் இருதரப்பினர்களுக்குமிடையில் பயங்கர மோதல்கள் ஏற்பட்டன. ஆயிரக் கணக்கில் செத்து மடிந்தனர்.

## உண்ணாவிரதம்

இரத்த ஆறு ஓடியது. இது நிறுத்தப்படாவிடில் இறக்கும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக காந்தி அறிவித்தார். படுகொலைகளை நிறுத்துவதாக முஸ்லிம், இந்து சீக்கியத்தலைவர்கள் காந்திஜியின் படுக்கையருகில் வந்து உறுதியளித்தனர். ஆனால் செப்டம்பர்மாதம் மீண்டும் பெரும் கலவரம் டில்லியில் ஏற்பட்டது காந்திஜி மீண்டும் உண்ணா நோன்பு இருந்தார்.

முஸ்லிம்களுக்கு அன்பு காட்டும்படி இந்துக்களை காந்திஜி கேட்டுக் கொண்டதை தீவிர இந்துக்கள் கடுமையாக எதிர்த்தனர் காந்திஜியின் மாலைநேர பிரார்த்தனைக் கூட்டமொன்றில் குண்டு வெடித்தது.

அடுத்த பிரார்த்தனைக் கூட்டத்தின் போது அங்குவந்தவர்களை பொலிசார் சோதனையிட்டபோது காந்திஜி அதைக் கண்டிப்பாக மறுத்து விட்டார். தமது உயிரைப்பற்றி அதிகாரிகளைக் கவலை கொள்ள வேண்டாமென்றார்.

## பிரார்த்தனை கூட்டத்தில்

"நான் பிரார்த்தனைக் கூட்டமொன்றில் தான் இறக்க வேண்டுமானால் இறந்துபோகிறேன்" என்றார்.

அவ்வாறே நடந்தது மிகப் பெரிய பிரார்த்தனைக்கூட்டமொன்றில் கலந்து கொள்ள சென்கையில் அவர் கொல்லப்பட்டார் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கருணை காட்டும்படி வேண்டிக் கொண்டமைக்காக ஆத்திரம் கொண்ட ஒருகுழுவைச் சேர்ந்த இந்து ஒருவன் அவரை துப்பாக்கியால் சுட்டான் "ஹே ராமா" என்று குரல் எழுப்பியபடி அவர் சரிந்தார்.

அவரது அஸ்தி மிகக் கவனமாக பாதுகாத்தெடுத்து இந்தியாவின் சகல மாகாணங்களிலும் மக்கள் மரியாதைக்கு வைக்கப்பட்டது பின் சிறு சிறு பகுதிகள் சகல கங்கைகளிலும் கரைக்கப்பட்டது.

காந்திஜியின் சீடரும் தெரிந்தெடுக்கப்பட்ட வாரிசுமான ஜவஹர்லால் நேரு நாட்டு மக்களுக்கு காந்திஜியின் மறைவுபற்றி வானொலியில் அறிவித்தபோது "எங்கள் வாழ்வின் ஒளிவெளியேறிவிட்டது; எங்கும் இருள் சூழ்ந்து கிடக்கின்றது" என்று கூறி கலங்கினார்.

மகாத்மா முப்பெரும் மக்கள் இயக்கங்களை நடத்தினார். ஒன்று காலனித்துவ ஆட்சிக்கெதிராக, இரண்டாவது இன ஒதுக்கலுக்கு எதிராக, மற்றது சமய பகைமைக்கெதிராக. எதையும் சாத்வீக முறையில் போராடி நிலைநாட்ட முடியும் என்பதை எதிர்கால சமூகத்துக்கு அவர் சாதனை மூலம் நிரூபித்துக்காட்டினார். மாட்டின் லூதர்கிங் போன்ற மனித உரிமைக்காகப் போராடுபவர்கள் அவரை உதாரபுருஷராகக் கொண்டனர்

உலக விஞ்ஞானமேதை ஐன்ஸ்ட்ரீன் காந்திஜியைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.

"இரத்தத்தசையோடு இம்மாதிரி ஒருவர் இந்த பூமியின் மீது நடமாடினார் என்பதை பிற்கால சந்ததியினர் நம்பவே மறுப்பார்கள்"

# லொறிச் சேவை நேற்று நடைபெறவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு லொறிச் சேவைகள் நேற்று நடைபெறவில்லை.

ஆள் கடத்தல், வாகனக் கடத்தல் மற்றும் கொள்ளைகளைக் கண்டித்து யாழ்: கொழும்பு லொறிச்சேவையை மறு அறிவித்தல் வரை நிறுத்துவதென முஸ்லிம் லொறி உரிமையாளர்கள் தீர்மானித்திருந்தனர். (ஏ)

# இன்றைய பலன்

மாதம்- புரட்டாசி
திகதி- 16 (1985-10-2)
கிழமை- புதன்
திதி- திருதியை
நட்சத்திரம்- பரணி

மேடம்:- உறவு முறைகளில் வெடிப்புகளேற்படும், பண விவகாரத்தின் மூலம் வழக்குகள் தோன்றலாம். தொழில் நஷ்டத்திற்குமிடமுண்டாம்.

இடபம்:- குடும்ப உறவுகள் பலப்படும், காதலர்கள் வாழ்விலும் தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும். எவ்விடயமும் இன்று கலபமாக முடியலாம்.

மிதுனம்:- பணம் விரயமாகலாம், அன்னிய வாசம், அகாலபோசனம் இவற்றுடன் துன்பத்தின் சாயலும் நிழலாடும், எவ்விடத்திலும் பொறுமை அவசியம்.

கடகம்:- பெரியோர் ஆசியுண்டு, பெருமதிப்புமுண்டு. இல்லத்திலும் உவகையுண்டாகும். நீண்டநாள் கொடுத்த கடனும் இன்று வந்து சேரலாம்.

சிங்கம்:- தொழில் சிறக்கும் புதுவாழ்வு பிறக்கும், எதிர்பாராத நன்மைகளும் இடம் பெறலாம், முன்னேற்றமான நாள்.

கன்னி:- தாமதகுணத்தின் மூலம், தவறுகள் நடக்கலாம், வீண் விவாதங்கள் ஏற்படும், எதிரிகளும் ஏக்காளமிடுவர், நிதானம் நன்று

துலாம்:- காதலர் எண்ணம் கைகூடலாம், களவிரப் பேச்சும் அவ்வழிச்சுகமும் உண்டு, பிரயாணமொன்றும் ஏற்படலாம்.

விருச்சிகம்:- அரசபகுதியிற்கு மிடமுண்டு. வரவில் மிஞ்சிய செலவுமுண்டு, அவப்பெயரை உருவாக்க கிளர் முனைவர், புத்தியுடன் நடந்து கொள்ளவும்.

தனுசு:- பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள், போதுமென்ற மனதுடன் செயல்படவும். கடமையிலும் புதிய ஆர்வம் பிறக்கும்,

மகரம்:- இலட்சியப்பாதையில் வீறுநடை போடுவீர்கள், வாகனச்சிறப்புமுண்டு. வளமான வாழ்வுமுண்டு. இன்று சுபதினம்.

கும்பம்:- சகோதர மகிழ்ச்சியுண்டு, சஞ்சல நிவர்த்தியுண்டு. ஆசிரியர் வாழ்விலும் ஆனந்தம் பிறக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

மீனம்:- அதிவேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின், சூழ்ச்சி பலமாயிருக்கும், குடும்பத்திலும் பிளவுகள் ஏற்படும், நிதானம் விரும்பத்தக்கது.

திருமலை
வே. ரவீந்திரன்

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
DEADLY COMMANDO
பிலிப்பைன்ஸில் தேர்ச்சி பெற்ற கொமாண்டோ குழு, கொரில்லாக்களுடன் சேர்ந்து, கிளர்ச்சிக்காரர்கள் மீது மேற்கொள்ளும் அதிரடித் தாக்குதல்கள்.
(மிகப்புதிய வெளியீடு)

ராணி மினி
9"X6" திரையரங்கில்
10-30, 12-30, 2-10
4-30, 6-30
Chained Heat
அமெரிக்க பெண்களின் மறியல் வாழ்க்கையை சித்தரிக்கும் படம்.

நாரத்தில் புதிய படம்
வின்சர்டீடி மினி
10-30, 2-30,
4-45, 7-00
FINAL MISSION
வயதுவந்தவர்கள் மட்டும்
தன் மனைவியையும், குழந்தையையும் குண்டுவைத்து அழித்த கயவர்களைத் தேடித் திரிந்து தன்னந்தனியனாகச் சென்று அவர்களை நிர்மூலமாக்கும் சண்டைப்படம். தொடக்கம் முதல் முடிவு வரை நீங்கள் இதுவரை பார்த்திருக்கமுடியாத சண்டைகள் நிறைந்தது.

வெலிங்டன்
10-30, 2-30, 6-30,
சிவாஜி - சுமதி நடித்த
சுவரில்லாத சித்திரம்
[கலர்]

ரீகல் சினிமா
10-30, 2-30, 6-30
தியாகராஜன், பூர்ணிமா நடித்த
நீங்கள் கேட்டவை
சங்கமம் கலர்

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 6-30
கமலகாசன், ரஜனிகாந், அமிதாப்பச்சன், மாதவி பூனம் தில்லான்
Geraf Taar
V.G.P.
பயங்கர சண்டைகள் சிறந்த பாடல்கள் நடனங்கள்.
இந்தியாவில் 175 நாட்களுக்கு மேல் ஓடியபடம்.

எம்பயர்
(வைத்தீஸ்வரா சந்தி)
7 அடித் திரையில்
தினசரி 10-30, 2-30, 6-30,
M G R., ஜெயலலிதா, நாகேஸ் நடித்த
"ரகசியப் பொலீஸ் 115"
இரவு 9-00 மணி
"ZWEI FAUSTE WIE EIN ORKAN
புதிய கராட்டிப் படம்
சகல காட்சிகளுக்கும் "புறூஸ்லி"யின் இறுதி யாத்திரைப் படம் காண்பிக்கப்படும்.

பருத்தித்துறை புலோலி
தெங்கு பனம்பொருள் உ. வி. கூ. சங்கம்
பதவி வெற்றிடங்களுக்கான
விண்ணப்பம்

| பதவிகள் | வெற்றிடம் |
|---|---|
| (1) மேற்பார்வையாளர் | 02 |
| (2) இளமுகாமையாளர் | 09 |

| | சம்பள வீதம் | வயது |
|---|---|---|
| பதவி (1) | 300—540 ...................... 15 x 12—20 x 3 | 18-30 |
| பதவி (2) | 195—345 ...................... 10 x 10—12/50 x 4 | 18-30 |

கல்வித்தகைமை:
க. பொ. த. சாதாரண பரீட்சையில் எண்கணிதம் அல்லது கணிதத்தில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.
மேற்படி பதவிகளுக்கு தனித்தனி விண்ணப்பங்கள் ஆணையாளரிடமிருந்து பதிவு/தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ சங்கத் தலைமைப்பணிமனைக்கு அனுப்புமாறு கோருகின்றேன்.
சங்க எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
நேர்முகப்பரீட்சை 16-10-85 காலை 9-00 மணிக்கு சங்கத் தலைமைப் பணிமனையில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் உரிய மூலச்சான்றிதழ்களுடன் சமுகந்தரவும். நேர்முகப் பரீட்சைக்கான தனிப்பட்ட அழைப்பு அனுப்பப்படமாட்டாது.
விண்ணப்ப முடிவு திகதி: 15-10-85.
பொதுமுகாமையாளர்.
தும்பளை வீதி, பருத்தித்துறை.
1-10-85. (1022)

புதன்கிழமை 2-10-85

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# திருமலை அரச ஊழியர்களுக்கு இப்படியும் ஒரு 'சோதனை!'

(ஏ. வி. மாணிக்கம்)

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்துக்கு வந்துள்ள அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் திரிசங்கு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

திருமலையிலிருந்து பாதிக்கப்பட்டு வந்த அந்த ஊழியர்கள் யாழ். செயலகத்தில் தங்கள் வரவைப் பதிந்து வந்தது தெரிந்ததே. ஆனாலும் அடுத்த திங்கள் 7ம் திகதிக்கு பின்னர் அவர்கள் கையொப்பமிடுவது தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் மாநாட்டில், திருமலையில் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு விசேட லீவு வழங்கப்பட்டு, யாழ். செயலகத்தில் கையொப்பமிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது குறித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டதாம்.

பாதிக்கப்பட்ட சிங்கள ஊழியருக்கு விசேட லீவு வழங்காத பொழுது எப்படி பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு அதை வழங்கமுடியும் என்ற கேள்வியும் அம்மாநாட்டில் எழுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து திருகோணமலை அரசாங்க அதிபர் திருகோணமலையில் பாதிக்கப்பட்டு வடபகுதிக்குச் அனுப்பிவைக்கப்படும் அகதிகள் பஸ்ஸில், பாதிக்கப்பட்டுச் சென்ற ஊழியர்களைக் கடமைக்கு திருமலைக்கு வருமாறு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளார்.

திருமலை அகதிகளை வவுனியாவில் இறக்கிவிட்டு, அங்கிருந்து திரும்பும் திருமலை பஸ்ஸில் ஊழியர்களை வரும்படியும் அதற்குப் பாதுகாப்பு வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை அரச அதிபர் தெரிவிக்கிறார்.

ஆனால் திருகோணமலையில் உடைமைகளைப் பறிகொடுத்தும், வீடுகளை இழந்தும், உயிர்களைப்பலி கொடுத்தும் 'தப்பினோம் பிழைத்தோம்' என்ற நிலையில் ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில், எப்படி அங்கு தங்கியிருந்து கடமையாற்ற முடியும் என்று கேட்கின்றனர் பாதிக்கப்பட்ட திருமலை அரச ஊழியர்கள்!

## அவசரகூட்டம் நாளை நடக்கிறது

திருகோணமலை மாவட்டத்திலிருந்து பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் அவசரக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட ஊழியர் சம்பந்தமான முக்கிய விஷயங்கள் கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டியிருப்பதால் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (மா)

# 5 முஸ்லிம்கள் கடத்தல்; 7லொறிகடத்தல்சம்பவங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இதுவரை 5 முஸ்லிம்கள் கடத்தப்பட்டதாகவும், இவர்களில் ஒருவர் தாக்குதலுக்கு பலியானதாகவும், முஸ்லிம் வர்த்தகர்களிடம் ஏழு கொள்ளை வாகனக் கடத்தல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும், ஏழு முஸ்லிம் இயக்கங்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

'தமிழீழ விடுதலை போராளிகளின் கவனத்திற்கு' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: 'தமிழீழ மக்கள் தமது தாயகத்தை மீட்பதற்கு போராட்டம் நடத்தி வருகின்ற வேளையில் யாழ்ப்பாணத்தில் ஆயுதம் ஏந்திய இளைஞர் குழுக்களில் சில, தம்மனம் போன போக்கின்படி செயல் ஆற்றி வருவதால் சிறுபான்மை இனமாகிய யாழ் முஸ்லிம்கள் பல்வேறு விதமான இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றார்கள்.

'எம். எம். எஸ் நிறுவனம், எஸ். எம் மீரான் சாகிப் நிறுவனம், கல்தான் நிறுவனம், எஸ். எம். சச்சு முகமது நிறுவனம், சலாம்ஸ் போக்குவரத்து நிறுவனம், கிளாஸ் கவுஸ் நிறுவனம் ஆகியவற்றின் லொறிகள், பல லட்சம் ரூபா பொருட்களுடன் கடத்தப்பட்டுள்ளன. கைபி போக்குவரத்து லொறி வழிமறிக்கப்பட்டது. ஏ. கரீம் என்பவரின் வாகனம் அவரது வீட்டில் வைத்து கடத்த முயற்சிக்கப்பட்டது. பல தனிப்பட்ட முஸ்லிம்களின் வாகனங்கள் பலவந்தமாக பறிக்கப்பட்டு பேரம்பேசி பணம் பெற்று விடுவிக்கப்பட்டன.

## அடகு வைத்தோர் சங்கம் சாதகமான முடிவு கிடைக்குமென நம்பிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ்: குடாநாட்டிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுவந்த மறியல் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையில், அடகு வைத்த சகலரையும் மறியல் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு, அடகு வைத்தோர் சங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

மேற்படி போராட்டத்தின் விளைவாக சாதகமான முடிவு விரைவில் கிடைக்கலாமென தாம் அடகு வைத்தோர் சங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (மா)

## 'போர் நிறுத்தம்' யாரை பாதுகாக்கிறது?

(யாழ்ப்பாணம்)

'போர் நிறுத்தம்' யாரைப் பாதுகாக்கிறது? என்று ஈழம் செய்திப்பலகை சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) வெளியிட்டுவரும் இச்சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பொத்துவில் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது.

'ரசாயனக்கிரவாதிகளின் ஆக்கிரமிப்புயுத்தம் திருகோணமலையில் தொடர்கிறது. சேருவில என்ற பேரினவில் இளம் பெண்கள் கூட்டமானபங்கம்: 14வயது முஸ்லிம் சிறுமி ஊர்காவற்படைக் குண்டர்களால் மானபங்கம். இதனைக் கண்டித்து முஸ்லிம் மக்கள் ஹர்த்தால் அனுஷ்டிப்பு;

மேலும் திருமலையில் அகதிகளான மக்கள் வங்களங்களை எதிர்பார்த்து கடற்கரையில் தங்கியிருப்பதாகவும், நிலாவெளியில் 50க்கும் மேற்பட்டோர் துப்பாக்கி வேட்டுக்குப் பலியானதுடன் அங்குள்ள வீடுகள் குண்டுவைத்து தகர்க்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடபகுதிக்கு வந்துள்ள திருமலை அரச கூட்டுத்தாபன ஊழியர்களை திருமலைக்கு வருமாறு திருமலை அரசாங்க அதிபர் அழைப்பு விடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக அனுமதி பெற்ற மாணவர் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

யாழ்: பல்கலைக்கழகத்தில் புதிதாக அனுமதிபெற்றமாணவர்கள் இம்மாதம் 15ம் திகதிக்குமுன்னர் தபால் மூலம் பதிவு செய்வதற்கென அவர்களுக்குப் பதிவுப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மாணவர்களுக்கான ஆங்கிலத் தேர்ச்சிப் பரீட்சையும் ஆங்கிலத்தில் துரிதபாட நெறிக்கான வகுப்புகளும் இப்பல்கலைக்கழகத்தில் இம்மாதம் 16ம் திகதி காலை 9 மணிக்குத் தொடங்கவுள்ளது. அனுமதி கிடைத்துள்ள சகல மாணவர்களும் இவற்றுக்குச் சமுகமளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இம்மாதம் 16ம் திகதி யாழ் பல்கலைக்கழகத்துக்கு வரும்போது மாணவர் ஒவ்வொருவரும் தேசிய அடையாள அட்டைகளை பல்கலைக்கழக ஆணைக்குழுவிலிருந்து பெற்றுக் கொண்டு அனுமதிக்கடிதத்தையும் பதிவுப்பத்திரங்களை அனுப்புவதற்குரிய அத்தாட்சிப்பத்திரங்களையும் கொண்டு வர வேண்டும் என்று உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (மா)

## கைதான பலரும் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டவர்களில் பெருந்தொகையானவர்கள் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர்.

சுமார் ஒன்பதுபேர் மட்டும் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## 6 லட்சம் தங்கம் கடத்தல்: 3 லட்சம் அபராதம்

(கொழும்பு)

6 லட்சம் ரூபா பெறுமதியான 16 தங்கப்பாளங்களை கடத்த முயன்ற 3 நபர்களுக்கு 3 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷைச் சேர்ந்த 3 நபர்கள் இத் தங்கக் கடத்தலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## 12 வயதுச் சிறுமி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிவரவில்லை நான் அப்பாவுடன் நெடுங்கேணி காட்டுப் பூவரசங் குளத்தில் வசித்து வந்தேன் அப்பாவை ஆயுதப் படையினர் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் நானும், தம்பியும் இருக்கின்றோம். போன அப்பா இன்னமும் திரும்பிவரவேயில்லை'' என்று அச்சிறுமி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

இக்குடும்பம் நுவரெலியாவில் வசித்து வந்ததாகவும் நன்கு வருடங்களுக்கு முன்னர் இங்கு வந்து குடியேறியதாகவும் தெரியவருகின்றது.

## முகாமிலிருந்து தப்பிய 'ராஜா'வின் கதை இது

(சென்னை)

"என்னை ஒரு தமிழ்ப் புலி என்று பிழையாக அடையாளம் கண்ட இலங்கை இராணுவத்தினர் எனது கைகளை உடைந்த கண்ணாடித் துண்டுகளினால் வெட்டிச் சித்திரவதை செய்தனர்''.

இவ்வாறு திருமலையிலிருந்து அகதியாக இராமேஸ்வரம் சென்ற 'ராஜா' என்ற பாடசாலை மாணவன் 'இந்து'ப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளான்.

திருமலை இராணுவ முகாமிலிருந்து தப்பிச்சென்று அகதியாக இராமேஸ்வரம் வந்து சேர்ந்த இந்தப் பாடசாலை மாணவன், தாம் இராணுவ முகாமிலிருந்து எவ்வாறு தப்பினான் என்பதனை விளக்கினான்.

''திருமலை நகரில் ஹோட்டலொன்று வைத்து நடத்தும் எனது தந்தையைப் பார்க்க நான் திருமலை நகருக்குச் சென்றேன். அங்கே பஸ் நிலையத்தில் பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டேன் நான் ஒரு பாடசாலை மாணவன் என்று கூறியபோதும் இராணுவத்தினர் என்னை முகாமுக்குக் கொண்டுசென்றனர் என்னை ஒரு தமிழ்ப் புலி என்று ஒத்துக்கொள்ளுமாறு என்னை ஒரு இராணுவ வீரர் சித்திரவதை செய்தார் அவர், 'நீ ஒரு தமிழ் புலியா?' என்று கேட்டு ஒவ்வொரு நாளும் சித்திரவதை செய்தார் எனது சகோதரியின் பெயரைக் கேட்டார் அதற்கு நான் சித்திரா என்று பதிலளித்தேன் எனது சகோதரியின் பெயரைக் கண்ணாடித் துண்டுகளினால் எனது கைகளில் எழுதுமாறு சொன்னார்கள் தாங்க முடியாத வலியுடன் அதனை எழுதினேன் பின்னர் என்னை ஒரு அறையில் அடைத்தனர். ஒவ்வொரு நாளும் எனது கைகளைக் கண்ணாடித் துண்டுகளினால் வெட்டிச் சித்திரவதை செய்தனர்.

'இந்தக் கைகளா எமக்கு எதிராக துப்பாக்கி ஏந்தியவைகள்?'' என்று கேட்டு சித்திரவதை செய்தனர்! எனது உடம்பின் சகல பகுதிகளிலும் அடித்த பின்னர் தமது சித்திரவதைகளை முடித்தனர்.'' என்று கூறிய அவர், தமது கைகளில் இருந்த காயங்களையும 'இந்து' பத்திரிகை நிருபருக்கு காட்டினார்

'ஒருநாள் இராணுவ முகாம வளவில் வைத்து என்னையும் மற்றொரு இளைஞரையும் சித்திரவதை செய்தனர். அந்தச் சமயம் இராணுவ உயர் அதிகாரியொருவர் அங்கே வந்ததினால் சித்திரவதை செய்தவர்கள் எங்களை விட்டு அவரிடம் சென்றனர். இந்தச் சமயம்பார்த்து நானும் மேலும் மூவரும் ஓடிச்சென்று மதிலால் ஏறினோம். நான் வெளியே சென்றுவிட்டேன் வெளியில் நின்று கொண்டு எனது தோழரை கைகொடுத்து தூக்க எத்தனித்தேன் அப்பது இராணுவ வீரர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததினால் நண்பர் வீழ்ந்துவிட்டார் நான் அவரை விட்டுவிட்டு வெளியே ஓடிச் சென்றேன். அப்போது அங்கு வந்த ஒரு வாகனத்தில் ஏறும் வாய்ப்பு கிடைத்தது. எனது பெற்றோரைப் பார்க்கப்போவதாக அவர்களிடம் கூறினேன். எனது தந்தையார் இறந்துவிட்டதாக அவர்கள் என்னிடம் கூறினார்கள் எனது தாயாரும் சகோதரியும் தப்பி இராமேஸ்வரம் சென்று விட்டதாக அவர்கள் என்னிடம் கூறினார்கள் கடந்த வியாழக்கிழமை 122 அகதிகளுடன் சேர்ந்து இராமேஸ்வரம் வந்து சேர்ந்தேன்'' என்று அந்தப் பேட்டியில் ராஜா தெரிவித்துள்ளார்

## புதிய தலைவர் தெரிவு

யாழ்ப்பாணம்

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக திரு. வே. க. கருணாகரனும் உபதலைவராக திரு குமாரசூரியரும் தெரிவுபெற்றுள்ளனர்.

கடத்தப்பட்டு 15-வது நாள்
உருக்கமானவேண்டுகோள்

வீடியோ பிரசாத் நிர்வாகி திரு சே. இராமநாதன் அவர்கள் 18-9-85ல் கடத்தப்பட்டு இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை. கடத்தியவர்கள் மனிதாபிமானமுறையில் அவரை விடுதலைசெய்து எங்கள் துயரத்தை நீக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். இங்ஙனம்

இராமநாதன் குடும்பத்தினர்,
(1013) உற்றார், உறவினர் நண்பர்கள்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் அவர்களுக்காக யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 66-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 10036/81. Eelanadu P. O. Box 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24180